1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்கரவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 18-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சோழகக்காற்று புசலைப்போன்று உரமாகவீசிக்கொண்டு வருகிறது. அதனால் மழைக்கோலம் அதிகமாகக் காணப்பட்டும் சிறுமழைதான் இடையிடையே பெய்கின்றது.

### கண்டிப் பாப்பாசர்குருமடம்

கண்டியிலுள்ள பாப்பாசர்குருமடத்திலே நிகழும்வைகாசிமாதம் 13-ந்திகதியாகிய நாளைவெள்ளிக்கிழமைகாலை திரிகோணமலை மேற்றிராணியாரும், அக்குருமடத்தின் முன்னைநாள் தலைவருமான மகாவந். இக்னேஷஸ் கிளென்னி ஆண்டவராலே பதினேழுதியாக்கோன்மார் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெறுவார்கள். இந்தக் குருத்துவாபிஷேக திருவைபவமும், அதுநிகழுந்தினமும் விசேஷஞாபகத்துக்குரிய ஓர்வைபவமும், சந்தர்ப்பமுமாகும். ஏனெனில், கண்டியிலே பாப்பாசர்குருமடத்தில் கடைசிமுறையாகநடந்தேறும் குருப்பட்டாபிஷேகவைபவம்இதுவேயாகும். இத்துடன் இலங்கையிலே கடந்த 62 வருடகாலமாகப் பிரஸ்தாபத்துடன் நிலைபெற்றுவிளங்கிவந்த இந்தக்குருமடத்தின் கீர்த்திவாய்ந்த சரித்திரசம்பவம் இங்கே ஓர்முடிவுக்கு வருகின்றது. இந்தக்குருத்துவாபிஷேகம் நிகழ்ந்து இருவாரங்களுக்கிடையில் இந்தப்பாப்பாசர்குருமடம் ஸ்ரீலங்காவுக்குப் பிரியாவிடைகூறிவிட்டு, இந்தியாவிலே பூனாநகரின்சுற்றுடலிலுள்ள தனது புதியஇருப்பிடத்திற்குச் செல்லுமாறு இடம்பெயராவிருக்கின்றது.

### விஞ்ஞானிகளின் ஆயத்தம்

வருகிறஆனிமாதம் 20-ந்திகதியன்று இலங்கையில் தோற்றவிருக்கும் சூரிய கிரகணத்தைக் கவனிப்பதற்காகச் சர்வகலாசாலைப் பேராசிரியர்களும், போதகாசிரியர்களும், உதவிப்போதகாசிரியர்களும் ஹிங்கறக்கடுவை, சிகிரியா, பொலனறுவா ஆதியாமிடங்கட்குச் செல்வார்கள். இதற்கென்று ஜப்பானிய–சுவிற்சர்லாந்த விஞ்ஞானிகள் பொலனறுவை வாடிவீட்டை நெடுநாளைக்கு முன்னரே அமர்த்திவிட்டார்கள். அன்றுகாலை தாங்கள் வேலைசெய்யும் இடங்களுக்குப் பிரயாணஞ்செய்கிறவர்களும் சூரியகிரகணத்தைக்காணும் சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள். எவ்வாறெனில், சூரியகிரகணம் உண்டாயிருக்கும்நேரத்தில் சகலறெயின்வண்டிகள், பஸ்வண்டிகளினதும் போக்குவரத்து ஆங்காங்குநிறுத்தப்பட விருக்கின்றன.

### சூரியகிரகணமும் பாடசாலைகளும்

சூரியகிரகணம் உண்டாகவிருக்குந் தினமாகிய வருகிறஆனிமாதம் 20-ந் திகதியன்று இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளும் காலை 10 மணிக்கே ஆரம்பமாகும். சூரியகிரகணம் அன்று தினம் இலங்கையில் 8-11 மணி தொடக்கம் 8-16 மணிவரை நீடித்திருக்கும். அன்றுகாலை 10 மணிவரை சகலபாடசாலைகளும் மூடப்படவேண்டுமென்று செய்யப்பட்ட வேண்டுகோள்களின்பேரில் கல்விப்பகுதி அவ்வாறு உத்தரவிட்டிருக்கிறது. சூரியகிரகணத்தை வீட்டிலிருந்துபார்த்துப் பரிசீலனைசெய்யப் பாடசாலைப்பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென்று அந்தவேண்டுகோள்களிலே பாடசாலைகளின் தலைவர்கள் கல்விப்பகுதியைக் கேட்டிருந்தார்கள்.

### யாழ்ப்பாணத் தேர்தல்மனு அப்பீல்

யாழ்ப்பாணத் தேர்தல் ஆட்சேபமனுஅப்பீல் கொழும்பிலே சென்ற திங்கட்கிழமை செலவுதொகையின்றியே தள்ளப்படலாயிற்று. திரு. பிள்ளை, திரு. டி சில்வா, திரு. சான்சொனியாகிய மூன்று நீதியரசர்களுக்கும் இந்தஅப்பீல்மனுவில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் ஒன்றுகச்செய்துகொண்ட வேண்டுகோளின்பேரில்தான் அதுதள்ளப்படலாயிற்று. நீதியரசர்களின் தீர்ப்புப்படி, தேர்தல்ஆட்சேபமனு சமர்ப்பித்தவர்கள் பிணைப்பணமாகக் கட்டியிருந்த 7,000 ரூபாவையும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டும். இதுகொடுபட்டதும் திரு. பொன்னம்பலம்அவர்கள் ஏற்கனவே தேர்தல் ஆட்சேபமனு விசாரணைச் செலவு தொகையாக அம்மனுவைச் சமர்ப்பித்தவர்களால் தமக்குக்கொடுபடவேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்த 60,000 ரூபாவையும் வாங்காமல் விட்டுவிடுவார்.

### பிரதிநிதியின் வேண்டுகோள்

கந்தளாய், அரசினர் கமப்பண்ணையிலே சென்ற 7-ந் திகதி நடந்தேறிய கமக்காரர்தினப் பொதுக்கூட்டத்தில் மூதூர்ப்பிரதிநிதியான ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி அவர்கள் பேசியபோது பின்வருமாறு கூறலாயினர்:— விளைவைப்பெருக்கும் நோக்கத்துடன் கமக்காரர் தற்கால நவீனமுறைகளைக் கையாண்டு கமஞ்செய்துவந்தால் உணவு உற்பத்தியைப் பெருக்குவதோடு எமது நாட்டின் சுயதேவையையும் பூர்த்திசெய்து கொள்ளலாம். நவீனமுறைப்படி யந்திரங்களைக்கொண்டு கமஞ்செய்வது அதிகஞ் சுலபமுமாகும். கஷ்டப்படும் கமக்காரருக்கென அரசாங்க கமத்தொழிற்பகுதி கூட்டுறவு விளைபொருள் விற்பனவுச் சங்கங்கள்மூலம் கடன்உதவிவருகின்றது. அதிகமான குடியானவர்கள் கடனிலேபிறந்து கடனிலே மடிகிறார்கள். இவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கென்று இலகுவான வட்டிவசதிகளுடன் நியாயமான தவணைப்பணங்களாகச் செலுத்தக்கூடியமுறையிலே கடனுதவி அளிக்கப்படுகின்றது. கமமுயற்சிக்கான விதைநெல், யந்திரசாதனங்கள் ஆதியவற்றைக்கொண்டு நாம்எளிதில் முன்னேறலாம்என்பதே.

### இரண்டுதட்டுப் பஸ்கள்

கொழும்புப் பகுதியில் தற்சமயம் பாவனையில் இருந்துவருகிற இரட்டைத்தட்டுப் பஸ்களுக்குப்பதிலாக 64 பிரயாணிகளை ஏற்றிச்செல்லக்கூடிய ஒற்றைத்தட்டுப்பஸ்களையே பாவிப்பதென அங்குள்ள முதன்மைவாய்ந்த பஸ்கம்பெனிகளில் ஏறக்குறையச்சகலமுமே தீர்மானித்திருக்கின்றன. இரட்டைத்தட்டுப் பஸ்கள்விஷயமாய் யாதாமோர் விலக்கும் செய்யப்படவில்லையாயினும் பஸ்கம்பெனிகளே செலவுக்குக்கட்டாமையால் இனிமேல்அவற்றை இறக்குமதிசெய்வதில்லையெனத் தீர்மானிக்கலாயின. 64 பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய ஒற்றைத்தட்டுப் பஸ்களுக்கு ஏற்கனவேஆடர்கள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றில் முதலாவது பஸ் அடுத்தமாதஆரம்பத்தில் வந்து சேரும்போலிருக்கிறது.

### ஏக்கருக்கு 35 புசல்

மற்றும் அநேகநாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து இலங்கையின் சராசரிநெல்விளைவு மிகவும்குறைந்ததாகுமென்று நெல்ஆராய்ச்சியிலும், உற்பத்தியிலும் பிரசித்திபெற்ற ஓர்பிரான்சிய நிபுணரான பறன் வில்மோறின் அவர்கள் கூறுகின்றார். இலங்கையில் நெல்உற்பத்தியை அதிகரிக்கச்செய்வதற்கான வழிவகைகள்பற்றி ஆலோசனைகூறுமாறு இவர்பிரதமரால் இங்கேஅழைக்கப்பட்டுள்ளனர். நெல் உற்பத்தியைஇங்கே திருத்தி விருத்திசெய்ய முடியுமென்றும், ஸ்பெயினைப் போன்று ஏக்கர்ஒன்றுக்குச் சராசரியாக 120 புசல்நெல்லை உற்பத்திசெய்யலாமென எதிர்பார்க்கமுடியாது; ஆயினும இங்கேவிரைவில் ஏக்கர்ஒன்றுக்குச் சராசரியாக 35 புசல்நெல்வீதம் உற்பத்திசெய்யலாமென நம்புவது நியாயமாகத் தோன்றுகிறதென்றும் இந்தநிபுணர் தெரிவித்திருக்கின்றார்.

### கமத்தொழிற்கல்லூரித் தலைவி

கொழும்புத்திட்டத்தின்கீழ் பெண்களுக்கென அமைக்கப்படவிருக்கும் இலங்கைக் கமத்தொழிற்கல்லூரியின் தலைவியாக, சிட்னிநகர சர்வகலாசாலையிலே கமத்தொழிலில் பட்டம்பெற்ற திருமதி ஜே. கே. மூறேஎனும்மாது நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் நியூகினியா, பப்புவா தீவுகளின் முன்னைநாள் நிர்வாகஸ்தராயிருந்த கேர்ணல் ஜே. கே. மூறேஅவர்களின் பாரியார்.

### டக்றர் எஸ். எவ். செல்லப்பா

இலங்கையிலே அரசாங்கவைத்தியசேவைத் தலைவராயிருந்து இந்நாட்டின் பொதுசனசுகாதார திட்டத்தை அமைக்கப் பேருதவியாயிருந்த டக்றர் எஸ். எவ். செல்லப்பாஅவர்கள் தற்போது உலகசுகாதாரஸ்தாபன நிபுணராகப் பர்மாவில் அதேதகைமையுடன் கடமையாற்றிவருகின்றார். உலகசுகாதார ஸ்தாபனத்துக்கும், பர்மாஅரசாங்கத்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள ஓர் உடன்படிக்கையின்பேரில் பர்மாவிலே டக்றர் செல்லப்பா அவர்கள் பொதுசன சுகாதார ஆலோசகராயிருந்து பூரணமானஓர்சுகாதாரகொள்கையை உருவாக்குவதற்கு வேண்டிய உதவிசெய்து வருவார்.

### நகரசபையின் வேண்டுகோள்

யாழ்ப்பாணத்து அரசினர்பெரிய ஆஸ்பத்திரியிலே வைத்தியசிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு தூரமான இடங்களிலிருந்து வருகிறநோயாளர்களுக்குவசதியாய் அந்தஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் சிகிச்சைநிலையம் தினமும்இரவுபகலாகத் திறந்துவைக்கப்படவேண்டுமெனக்கேட்டு யாழ்ப்பாணநகரசபையின் மாதாந்தகூட்டத்தில் கொண்டுவரப்பட்ட ஓர்பிரேரணை ஏகமனதாக அரங்கேறியிருக்கிறது.

### கற்றவாலிபரும் கமப்பயிற்சியும்

யாழ்ப்பாணத்திலே கற்றவாலிபர்களுக்குக் கமப்பயிற்சியளித்து வட்டக்கச்சியிலே அவர்களைக் குடியேற்றும் அரசாங்கதிட்டத்தைச் சென்ற 9-ந் திகதி திங்களன்று உணவு – கமத்தொழில் மந்திரியார் ஆரம்பித்துவைத்தார். இந்தவாலிபர்களுக்குத் தற்போது 120 காணித்துண்டுகளே கிடைக்கக்கூடியனவாய் இருக்கின்றன. கமத்தொழில்சம்பந்தமான அறிவும், மற்றும திறமையும், நல்லதிடகாத்திரமுமுள்ள 140 வாலிபர்கள் பயிற்சிக்கென்று தெரியப்பட்டிருக்கிறார்கள். பயிற்சிமுடிந்ததும் நடைபெறும் பரீட்சையில் சித்தியடைகிறவர்களே குடியேற்றிவைக்கப்படுவார்கள். கமத்தொழில், கால்நடைவளர்ப்பு, கமஉபகாரணங்களைப் பிரயோகிக்கும் முறை ஆகியதுறைகளில் இவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். வருகிறஆவணி மாதம் இவர்கள் குடியேற்றிவைக்கப்படுவார்கள். குடியேற்றதிட்டங்களில் குடியேறிய மற்றும்கமக்காரர் அனுபவிக்கும் சகலவசதிகளும் இவர்களுக்கும் அளிக்கப்படும். முதல்இரண்டு வருடங்களுக்குச் சிரேஷ்ட கமத்தொழில் அதிகாரிஒருவர் இவர்களுக்கு வழிகாட்டியாய் இருந்துவருவார். கூட்டுறவு–கமத்தொழில் உற்பத்திவிற்பனவுச் சங்கம்ஒன்றும், கூட்டுறவுக் கடன்வசதிச் சங்கம்ஒன்றும் இவர்களுக்கு அமைத்துக்கொடுக்கப்படும். மந்திரியார் அவ்வேளை பேசியபோது: அவர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் மூன்றுஏக்கர் நெற்காணியும், இரண்டுஏக்கர் மேட்டுக்காணியும் மாதம்ஒன்றுக்கு நூறுரூபாபெறுமதியான வருமானத்தை அவர்களுக்குக் கொடுக்குமென்றும், முந்தமுந்த நூறுரூபா ஆதாயம்பெறுகிறவருக்குத் தம்மால் வெகுமதியளிக்கப்படுமென்றும், பாக்குநீரிணையை நீந்திவெற்றிகொண்ட திரு. நவரத்தினசாமி அவர்களே இந்த வாலிபகமக்காரருக்கு வழிகாட்டியாக இருப்பாரென்றும் கூறலாயினர்.

### பரிதாப விமானவிபத்து

றோயல்இலங்கை விமானப்படையைச்சேர்ந்த ஓர்விமானியான 23 வயதுடைய திரு. என். எஸ். செல்வராஜன் என்பவர் சென்ற செவ்வாய்க்கிழமைகாலை கட்டுநாயக விமானநிலையத்தைஅடுத்துள்ள ஓர்தென்னந்தோட்டத்தில் தாம்செலுத்திச்சென்ற விமானத்துடன்விழுந்து விபத்துக்குள்ளாய் இறந்துபோயினர். மூன்றுலட்சம்ரூபா பெறுமதியுள்ள தமதுவிமானத்திலே ஆகாயத்தில் 400 அடிஉயரத்துக்குப் பறந்துசென்றபின் விமானத்தில் கோளாறுஏற்படவே அதுகுப்புற அடித்துக்கொண்டுவிழுந்து தீப்பற்றிக்கொண்டது. அதனால் எரிந்தவிமானத்துள்ளே அடையாளங் கண்டுபிடிக்க முடியாதபடி அவர்உடல் கருகிப்போயிற்று. பிந்தஇவர்பிரேதம் இவருடைய சொந்த ஊராகிய மிருசுவிலுக்குக் கொண்டுவரப்பெற்று அடக்கஞ்செய்யப்படலாயிற்று. பிரேதம்அவ்வளவாகக் கருகிப்போயிருந்தமையால் பிரேதப்பெட்டியைத்திறந்து அதைப்பார்க்க எவருமே அனுமதிக்கப்படவில்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப செபமாலை இயக்கம்

A. K.

(வண. பற்றிக் பெயிற்றன் சுவாமிகளது கட்டுரைகளைத் தழுவி எழுதப் பட்டது.)

(முன்தொடர்ச்சி)

## செபமாலையின் வெற்றி

இதோ வருங்கால உலகத்தைச் சற்றே கற்பனைசெய்து பார்ப்போம். கிறீஸ்துவ உலகமே திருச்செபமாலை செபிக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் திருச்செபமாலை இயக்கத்தில் சேர்ந்து, குடும்பத்திலுள்ள எல்லோருமாக நாளும் செபிக்கிறார்கள். குடும்பங்களும், நாடுகளும், உலகமும் கடவுள் பற்றுள்ள தாய்த்துலங்குகிறது. செபமாலை செபிக்கும் குடும்பத்தில் சமாதானம் நிலவுகிறது. அதுபோலச் செபிக்கும்உலகில் சமாதானம் ஓங்குகிறது. உலகத்தையே பிணைத்துக்கட்டும் பெரியசங்கிலியின் ஒருகணு நமது சிறுகுடும்பம். எனவே, குடும்பசெபமாலையால் நாஸ்திகஉலகம் ஆஸ்திக உலகமாக மாறுகிறது.

நமதுகுடும்பம் செபமாலைக் குடும்பமாய் இருக்கவேண்டுமென்பதற்கு இதுதான் காரணம். தினசரிசெபமாலை குடும்பத்தில் சமாதானத்தையும், பரஸ்பரஉறவையும் நிலைநாட்டுகிறது. ஏனெனில், செபிக்கும் குடும்பம் எப்போதும் ஒன்றித்திருக்கும். குடும்பத்தில் சச்சரவுகள், பூசல்கள் இருந்தாலும், அன்றுமாலை குடும்பமே தேவதாய் முன்னிருந்து ஒன்றாய்ச் செபிக்கும்போது எல்லாம்பறந்து போய்விடுகிறது. மனக்கசப்புமாறி மனச்சாந்தி நிலவுகிறது.

சிறுவர்கள் கெட்டுப்போகிறார்கள்என்று எல்லோரும் இக்காலத்தில் முறையிடுகிறார்களே. குடும்பசெபமாலை செபிக்கும் குடும்பத்தில் வளரும் சிறுவர்களைக் கவனியுங்கள். கடவுளின் அன்பிலும், மாதாவின் அரவணைப்பிலும்வளரும் இச்சிறுவர்கள் தேவகட்டளைக்குப் பயந்து நடப்பார்கள். மனச்சான்றுக்கு மாறானவைகளை விலக்குவார்கள். அடிக்கடி ஆலயம்சென்று நல்லபாவசங்கீர்த்தனம்செய்து, திவ்வியநற்கருணை உட்கொள்வார்கள். செபமாலைசெபிக்கும் குடும்பம் பரிசுத்தகுடும்பம் எனலாம். பரிசுத்தகுடும்பம் பாக்கியமான குடும்பம்.

## மந்திரங்களின் மகிமை

குடும்பசெபமாலை செபிக்கும்போது குடும்பத்தில்நாம் முதல்முதல் செய்கிறதுஎன்ன? எல்லோரும் சிலுவை அடையாளம் வரைந்து கொள்ளுகிறோம். சிலுவைஅடையாளம் நமதுமீட்பின் அடையாளம். இரண்டாம் ஆளாகியசுதன் மனுஷஅவதாரமெடுத்து, நமக்காகச் சிலுவையில் மரித்து, நம்மைப் பிசாசின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டார். அந்த அடையாளத்தை வரையும்போது, எல்லோரும் ஒரேகுரல்சப்தமாய்ப் "பிதாவுடையவும் சுதனுடையவும் இஸ்பிரீத்துசாந்துவுடையவும் நாமத்தினாலே" என்றுசொல்லித்தொடங்குகிறோம். நமதுசெபமாலையைத்திரியேககடவுளின் நாமத்தினால் ஒப்புக்கொடுக்கிறோம். பின்னும், நமதுசெபமாலையில் தொங்கும் சிலுவையைக் கரங்களில் அன்போடு பிடித்துக்கொண்டு விசுவாசமந்திரத்தைச் சொல்லுகிறோம். நமது திருமறையின் பிரதான சத்தியங்களையும், பரமஇரகசியங்களையும் உச்சரித்து, நமதுவிசுவாசத்தைப் புதுப்பிக்கிறோம்.

அடுத்தபடியாகக் கர்த்தர்கற்பித்த செபத்தைச் சொல்லுகிறோம். அச்செபம் நம்மை உயரத்தூக்கிச் செல்லுகிறது. நமது உண்மைநிலையை எடுத்துக்காட்டுகிறது. நாம்உலகிலுள்ள தாய் தந்தையின் மக்கள் என்கிற முறையிலல்ல, ஆனால், கடவுளின் மக்களென்றமுறையில் விண்ணுலக குடும்பத்தோடு சேர்ந்து செபிக்கிறோம். 'பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள்பிதாவே!' கடவுள் நமது நல்லதந்தை. கன்னிமரி நமது தாய். இச்செபத்தின்கருத்தையும், பொருளையும் ஆராய்வோமானால், மனிதன் இதை உண்டாக்கியிருக்க முடியாது. தேவசுதன்மட்டுமே கற்பித்திருக்க வேண்டும். இச்செபம் சுவிசேஷத்தின் ஒருபகுதிமட்டுமன்று. இது சுவிசேஷத்தின் சுருக்கம் எனத்தகும். ஏனென்றால், சுவிசேஷம் வற்புறுத்துவது நரமக்களாகிய நாம் தேவமக்களாய் வாழவேண்டும் என்பதல்லவா?

பிறகு, மங்கள வார்த்தைச் செபம்: 'பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே.' பல்லாண்டுகளாய்ப் பாமரரும், படித்தோரும் கனிந்த உள்ளத்தோடு சொல்லிவந்தசெபம். இன்றைக்கும் உடல்நல முள்ளவர்களும், இல்லாதவர்களும், மரணஅவஸ்தைப் படுவோரும், மற்றோரும் சலிப்பில்லாமல் சொல்லிவரும் செபம். என்ன அருமை! என்ன நேர்த்தி! இதற்குக் காரணமென்ன? தமது சிருஷ்டிகளிலெல்லாம் பொறுக்கி எடுத்து அழகுபடுத்தித் தமது தேவசுதனுக்குத் தாயாக நியமித்துத் தனிப்பெருமை செய்தாரல்லவா? அவரே வானதூதன் வழியாய் வார்த்தைகளால் வர்ணித்த வர்ணிப்பு அது. பிரியதத்தத்தினாலே பூரணமரியாயே வாழ்க! கர்த்தர் உம்முடனே! உலகிலுள்ள பெண்களிலெல்லாம் ஆசீர்பெற்றவள் நமது தாய்மட்டுந்தான். இப்போதும் எப்போதும் நமது மரணநேரத்திலும் நமக்கு உதவிசெய்யவல்ல நாயகி அவள். கடவுளின் அளவில்லா ஞானத்தின் அற்புத சிருஷ்டியல்லவா நமது அருள் நிறைந்த மரி! தினமும் 53 தடவை அவளை அழைக்கும் குடும்பம் எத்துணை பாக்கியம் பெற்றது!

கடைசியாக, திரித்துவ ஆராதனை: 'பிதாவுக்கும் சுதனுக்கும் இஸ்பிரீத்துசாந்துவுக்கும் தோத்திரமுண்டாகக்கடவது. ஆதியிலே ஆனதன்மை இப்பொழுதும் எப்பொழுதும் அநாதிசதாகாலமும் ஆகக்கடவது.' நமதுவேதத்தின் முக்கிய பரமஇரகசியம் திரியேக கடவுளைப் பற்றியது. கடவுள் ஒருவர், ஆள்வகையில் மூவர். தினமும் செபமாலை செபிக்கும்குடும்பம் ஆறுதடவையாகிலும் திரியேக கடவுளுக்குத் தோத்திரம் செலுத்துகிறார்கள். எத்தனை உன்னத கைங்கரியம்!

---

# அவனுக்காகவா பரிந்துபேசுகிறீர்

("பிங்" முன்னோடி)

அர்ச். பிரான்சீஸ்குவின் சபையைச் சேர்ந்த வண. லூயிஸ்சுவாமியாரும், நெயாபோலியநாட்டு (நேப்பிள்ஸ்)மன்னர் இரண்டாவது பெர்டினண்டும் இணைபிரியாத சிநேகிதர்கள். ஒரு சமயம் லூயிஸ்சுவாமியார் ஆபிரிக்காவிற்குச் சத்தியவேதபிரசாரம்செய்யப் போவதற்குமுன் அரசனைக் கண்டு கொண்டுபோக வந்தார். அரசன் சுவாமியாரை மிகவும் மதித்துவந்தான். அவன் அவரை ஆபிரிக்காவிலிருந்து திரும்பிவந்ததும் தன்னைத்திரும்பவும் வந்து சந்திக்கும்படி வேண்டிக்கொண்டான். லூயிஸ் சுவாமியாரும் அங்ஙனமே செய்வதாக வாக்களித்தார்.

ஆபிரிக்க பிரதேசங்களில் சத்திய வேதத்தைப் போதிக்கப் போதியபிரசாரங்கள் நடைபெருதபடியால, சுதேசசிறுவர்களைத் தேர்ந்தெடுத்துக் கல்விபுகட்டி, அவர்களை அப்போஸ்தலிக்க அலுவலுககு ஆயத்தப்படுத்த வேண்டுமென்பதற்காகவே சுவாமியார் ஆபிரிக்காவிற்குச் சென்றார்.

தனியேல் ஒருதேசத்துரோகி. அவன் பெர்டினண்ட் மன்னனுக்கு எதிராகக் கலகக்காரருடன் சேர்ந்து, இராசதுரோகததில் மற்றவர்களிலும் மிஞ்சியவனாய் இருந்தான். அதனால், அவன் அரசனால் தேசப்பிரஷ்டம்செய்யப்பட்டு, அப்பொழுது அலெக்சாந்திரியாநகரில் வசித்துவந்தான்.

லூயிஸ்சுவாமியார் கப்பலை விட்டு அலெக்சாந்திரியா துறைமுகத்தில் இறங்கினார். அதேசமயத்தில்தேசத்துரோகியான தனியேலும் துறைமுகப் பாலத்தின்மேல் 'உலாவிக்கொண்டிருந்து, கப்பலைவிட்டிறங்கிய லூயிஸ்சுவாமியாரைக் கண்டதே அவனுக்குக் கடுங்கோபமுண்டாயிற்று. தன்னைத் தாய் நாட்டிலிருந்து துரத்திய மன்னன்பெர்டினண்டின் அருமைநண்பர் லூயிஸ் சுவாமியார்என்று அவனுக்கு நன்றாகத்தெரியும். ஆதலால், அரசனையிட்டு அவன் சுவாமியாரையும் பகைத்தான்.

தனதுதுன்பத்திற்குக் காரணமான அரசனைத் தான்ஒன்றும்செய்ய முடியாவிட்டாலும், அவன்மேல் கொண்ட ஆத்திரத்தை அரசனுடைய மதிப்புக்குரியவரும், அன்பிற்குரியவருமான லூயிஸ்சுவாமியாரிலே காட்டத் தீர்மானித்தான்.

தனியேல் உடனே சுவாமியாரை அணுகி, "இதோ, இந்தப்பரிசை உன் அரசனும், ஆப்தநண்பனுமான மன்னன் பெர்டினண்டிற்குக் கொண்டு போய்க் கொடு" என்று கூறிக்கொண்டே, சுவாமியாரின் கன்னத்தில் ஓர் அறை ஓங்கிஅறைந்தான். சுவாமியாரோ அவன்கூறிய கடுஞ்சொற்களைக் காதில் விழுத்தாதவர்போலும், எவ்வித சம்பவமும நிகழாததுபோலவும் அப்பால் நடந்துசென்றார்

எட்டுமாதங்கள் கழிந்தன. லூயிஸ் சுவாமியார் தாம்போன அலுவல்களை முடித்துக்கொண்டு ஆபிரிக்காவிலிருந்து, நெயாப்போலிநாட்டிற்குப் புறப்பட்டார். தாம் அரசனுக்குக் கொடுத்த வாக்குப்பிரகாரம் ஆபிரிக்காவிலிருந்து திரும்பியதும் சுவாமியார் தம்மோடு அழைத்துச்சென்ற நீக்கிரோச்சிறுவர்களுடன் நேரே அரசனிடம்சென்றார்.

தனது மனைவி மக்களுடனும், மந்திரிமார்களுடனும் சுவாமியாரின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அரசன் அவரைக்கண்டதே ஆவலோடு அவரை ஆலிங்கனஞ் செய்துகொள்ளத் தனது அரியாசனத்தினின்றும் இறங்கி ஓடோடியுஞ் சென்றான்.

ஆனால், லூயிஸ்சுவாமியார் அதற்கு முன்னதாகவே அரசனின் பாதங்களில் விழுந்து, "மகாராசாவே! எல்லாவற்றிற்கும்முன் நான் தங்களிடம் ஓர் மனுச் செய்துகொள்ளத் தயைபுரிய வேண்டு"மென்று கேட்டுக்கொண்டார்.

"நல்லது, அதென்ன காரியம்? சொல்லும்; நான்உம்மை எவ்வளவாக மதிக்கிறேனென்று உமக்கேதெரியும்; தாம் கேட்டதை யான் என்றாவது மறுத்ததுண்டா? உம்மைப்பார்த்தால் ஏதோ எனதுஇராச்சியத்தில் பாதி கேட்க வந்திருப்பவர்போல் இருக்கிறதே" என்று வேடிக்கையாக உரைத்தான் அரசன்.

"மகாராசாவே! நான் அதனிலும் பெரிய காரியமொன்றைக் கேட்கப் போகிறேன்; பலவருடங்களுக்குமுன் தங்களால் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டுத் தற்போது எகிப்தில் வசித்து வரும் தனியேலுக்கு மன்னிப்புக் கொடுக்க வேண்டுமென்றுதான் நான் தங்களிடம்..." என்றுமுடிப்பதற்குள்,

மன்னன் முகம்மாறியவனாய்த் திடுக்கிட்டு, "என்ன? தனியேலா! தூக்குத்தண்டனை அடையவேண்டிய அந்தத்துரோகிக்குக் கருணைகாட்டித் தேசப்பிரஷ்டஞ்செய்து உயிர்ப்பிச்சை கொடுத்திருக்க, அவன் கொஞ்சமேனும் நன்றியில்லாது அயல்நாட்டிலிருந்தே எனக்கெதிராகக் கலகம்விளைவிக்க முயலுகிறான்; அந்தத் துரோகி தனியேலுக்காகவா— அவனுக்காகவா நீர் பரிந்துபேசுகிறீர்?" என்று ஆத்திரம்பொங்கக் கேட்டார்.

அதற்குச் சுவாமியார், "அரசே! அவனுக்காகத்தான்; நான் ஏதோ அற்பமனிதனாய்இருந்தாலும், தாங்கள் இந்தஏழையின் வேண்டுகோளை நிராகரிக்காது ஏற்றுக்கொள்ள வேண்டும்; பொல்லாங்குகளைப் பொறுப்பது சகல புண்ணியங்களிலும் மேலானதாகும்; இந்த உந்நத புண்ணிய காரியத்தைப் புரியுமாறு தங்களை நான் தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொண்டார்.

அதற்குமன்னன், "நல்லது, தாங்கள் கேட்டுக்கொண்டபடியால் நான் அந்தத்துரோகி தனியேலை மன்னிக்கிறேன்; ஆனால், அந்த மகாபாவிக்காகப் பரிந்துபேசத் தாம் எங்ஙனம் மனமிசைந்தீர் என்பதை அறிந்துகொள்ள நான் ஆவலுடையவனாயிருக்கிறேன்" என்றான்.

அப்போது சுவாமியார் அதற்கு என்னமறுமொழி கூறுவதெனத் தெரியாது திகைத்தார். தனியேல் தமது முகத்தில் அறைந்ததையும், அந்த அறையை அரசனுக்குக் கொண்டு போய்க் கொடுக்கும்படி ஆத்திரத்தோடு அவன் கூறியதையும் எங்ஙனம் மன்னனிடம் அவர் எடுத்துஉரைப்பார்?

ஆகையால், அவர்தடுமாற்றத்துடன் "அரசே! அதை யான் சொல்லக் கூடாது; ஆனால், தங்களுக்கு ஒரேயொரு கருமத்தைமாத்திரம் கூறினால் போதுமென்று எண்ணுகிறேன். அதென்னவெனில், தனியேல் எனக்கு ஒருமகத்தான காரியம் செய்திருக்கிறான்" என்றார்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பாப்பரசரின் வலதுபுயம்

பரிசுத்தபாப்பரசர் தமது வலதுபுயத்தை இஷ்டப்படியே திரும்பவும் அநேகமாய் ஒருபோதுமே உபயோகித்துக்கொள்ள முடியாதவராய் இருப்பாரென்று சமீபத்தில் ஓர்திங்கட்கிழமை எக்ஸ்-றேபிடித்துப் பரிசோதனைநடத்திய டக்டர்மார் நால்வரும் தெரிவித்திருக்கின்றனர். இவர்களிலே பாப்பரசரின் சொந்த வைத்தியரான புறெபெசர் றிக்கார்தோ கலெஸி-லிஸி அவர்களுமொருவர். மற்றொருவர் சுவிற்சர்லாந்த வைத்தியநிபுணரான டக்டர் போல் நிவெஹன்ஸ் அவர்கள். பலவேறுவகையான கதிர்ச்சிகிச்சை நடத்தியபின்னும் மக்களை ஆசீர்வதிப்பதற்கும், அவர்கள்முத்தமிடத்தக்கதாய்க் கணையாழியை நீட்டுவதற்குமாகப் பாப்பரசர் பிரயோகிக்கின்ற வலதுபுயத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான உபாதை குணமாகவில்லை. கடந்த மூன்றுவருடங்களிலும் அநேகதடவைகளிலே அவர் தமதுவலதுபுயத்தை அசைப்பதில் ஏற்படும் உபாதையினின்று விலகிக்கொள்வதற்காகத் தம்முடையகணையாழியை இடது கரத்தில் போடவேண்டியவரானார். இம்முறை தமதுபாஸ்குத்திருநாள் ஆசீர்வாதத்தை வழங்கியபோது அவர் தமதுபுயத்தை மேலே உயர்த்தப் பெரிதுங் கஷ்டப்பட்டதைப் பலரும் அவதானிக்கக்கூடியதாய் இருந்தது. இந்த உபாதை சம்பந்தமான நோய்நீங்கலாக அவரின்பொது ஆரோக்கியநிலையில் எவ்வித தகாதபாதிப்பும் இல்லையென்று டக்டர்மார் நம்புகின்றனர். அத்துடன் அவர் தம்மைப் பீடித்த நோயிலிருந்து ஆச்சரிய விதமாய்க் குணமடைந்தாரென்றும் விளக்கங் கூறுகிறார்கள். ஆயினும் சென்றவருடம் தம்மை மூர்ச்சிக்கப் பண்ணிய ஆயாசத்தை நீக்கிக்கொள்வதற்காக டக்டர்மாரின் ஆலோசனைப்படி அவர் தமது அலுவல்களைக் குறைத்திருக்கின்றார்.

## சுதந்திரகதவு மூடும்தினம்

இந்தோ - சீனவிலே வியெற்னாம்நாட்டின் கம்யூனிஸ்தவடபகுதியிலிருந்து சுதந்திரதென்பகுதிக்குச் சென்றுவிடுமாறு அப்பகுதியைநோக்கி அகதிகள் இன்னுமே வருந்தி முயன்றுகொண்டிருக்கிறார்கள். இந்தவைகாசி மாதம் 19-ந் திகதியன்று கம்யூனிஸ்த வியெற்னாமின் எல்லை மூடப்படும். அதன்மேல் எவருமே அங்கிருந்து தப்பியோடுவது அசாத்தியகருமமாகும். வியெற்னமிலே யுத்தம்முடிந்த நாள்முதல் இதுவரை ஐந்துலட்சம்பேருக்கு மேற்பட்டமக்கள் வடபகுதியிலுள்ள தங்கள் வீடு வாசல்களைக் கைவிட்டு, நூற்றுக் கணக்கானமைல்தூரம் கஷ்டநடைநடந்து சுதந்திர தென் பகுதியிற்போய் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். வழியிலே பலஆயிரக்கணக்கானோர் உயிர் துறந்தார்கள். இவர்களில் அநேகர் தாக்கமில்லாத வள்ளங்களிலும், சமயோசிதமாய்த் தயாரித்த மிதவைகளிலும் ஏறிச்சென்றபோது, அவைகள் கவிழ்ந்து ஏற்பட்டவிபத்துகளில் உயிர்துறந்தார்கள். வேறு அநேகர் கம்யூனிஸ்த காவல் வள்ளங்களிலிருந்து திரப்பட்ட குண்டுகள்பாய்ந்து உயிர்மாண்டார்கள். பன்னூற்றுக் கணக்கானோர் தெனபகுதியைநோக்கிச் செல்லும்வழியிலே கம்யூனிஸ்தர்களால் இடைவழியிற்பிடித்துத் திரும்பவும் வடபகுதிக்குக் கொண்டுசென்று இன்னதென அறியப்படாத இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

## கத்தோலிக்க மந்திரியார்

சிங்கப்பூரின் இந்த முதலாவதுபொதுத்தேர்தலில்ஓர்பிரதிநிதியாக என்னைத்தெரிவுசெய்து அனுப்புவீர்களானால், கர்ப்பத் தடைமுகாந்திரமாக அரசாங்கம் உதவிவருகின்ற மான்யத்தைநிறுத்திவிட நான் பிரயாசை எடுப்பேனென்று உறுதிவாக்களித்த ஓர்கத்தோலிக்க அபேட்சகரான திரு. ஆர். ஏ. ஜே. பிரூகா அவர்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பெற்றது மாத்திரமல்ல, தற்போது சுகாதாரமந்திரியாராக நியமனஞ் செய்யப்பெற்றுமிருக்கின்றார். சிங்கப்பூர் அரசாங்கமகாசபையில் அடங்கியுள்ள 27 ஸ்தானங்களிலும் பத்துஸ்தானங்களை எதிர்பாராதவிதமாக வெற்றிகொண்ட தொழில்முன்னணியானது கம்யூனிஸ்த சார்புடையதல்லஎன்றுவண. ஜேம்ஸ் கியர்னிசுவாமியார் சிங்கப்பூரிலிருந்து அறிவித்திருக்கின்றார். இந்தமுன்னணியின் தலைவரும், பிரதமருமான திரு. டேவிட் மாஷல் அவர்கள் ஓர் யூதர். கத்தோலிக்க கலாசாலையில் கல்விபயின்றவர். சிங்கப்பூர்க் கத்தோலிக்கரில் பெரும்பான்மையினர் இந்தத்தொழில்முன்னணியையே ஆதரித்தார்கள்.

## கிழக்குஜேர்மனியில் பெரியவெள்ளி

கம்யூனிஸ்த ஆட்சி நடைபெற்றுவருகின்ற கிழக்குஜேர்மனியிலே இவ்வருடம் பெரியவெள்ளிக்கிழமைக் கொண்டாட்டம் வாணவேடிக்கையுடன் முடிவடையலாயிற்று. திருச்சபையின் திருச்சடங்கு அனுஷ்டானங்கள்மட்டில் தங்களுக்குள்ள விரோதத்தை உக்கிரமாகக் காண்பிக்குமாறு அங்கு கம்யூனிஸ்த அதிகாரிகள் பெரியவெள்ளிக்கிழமை, பாஸ்குஞாயிறையடுத்த திங்கட்கிழமையாகிய இருதினங்களையும் சாதாரண வேலைநாட்களாகப் பிரகடனஞ் செய்தார்கள். சாக்ஸனியைச் சேர்ந்த வெய்சென்நகரிலே பெரியவெள்ளியன்று இளைஞர்களுக்கென்று நடனத்துடனும், விருந்துஉபசாரத்துடனும்கூடிய கம்யூனிஸ்தயுவர்களின் பெருங் கூட்டம்ஒன்று நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ருஷிய, செக்கோசிலவாகிய யுவர்கள்குழுக்களின் பிரதிநிதிகள் அவர்களின் விருந்தாடிகளாய் இருந்தார்கள். இதிலே கலந்துகொண்டவர்கள் கோவில்ஆராதனைச் சடங்குகளுக்குச் செல்லாதபடி விசேஷ கட்டளைவிடுத்து அழைக்கப்பட்டிருந்தார்கள்.

## வீட்டுப்பணியாளரின் பாதுகாவல்

அர்ச். சீத்தம்மாளை (St. Zita) வீட்டுவேலைகாரர்களின் பாதுகாவலாளியாகத் திருச்சடங்காசார திருச்சங்கம் அதிகாரபூர்வமாய்ப் பிரசித்தஞ்செய்திருக்கிறது. அர்ச். சீத்தம்மாள் இத்தாலியிலே தஸ்கனிமாகாணத்தில் 1218-ம் ஆண்டு பிறந்தாள். இவள்பெற்றோர் மிகவறியவர்கள். அதனால், தனது பன்னிரண்டாம்வயதிலே லுக்காநகரில் வசித்திருந்த பாத்தினெல்லி என்ற குடும்பத்தினரின் வீட்டுவேலைகாரியாக அனுப்பிவைக்கப்பட்டாள். அதுமுதல் 44 வருடகாலம் — அதாவது மரணபரியந்தம் அங்கே ஓர் பணிப்பெண்ணாக வேலைசெய்துவந்தாள். ஆரம்பத்திலேஅவள் தனதுஎசமானராலும், உடன்வேலைகாரராலும் மிகவுங்குரூரமாக நடத்தப்பட்டு வெகுவாகக் கஷ்டப்பட்டு வருந்தினாள். ஆயினும், தன்னிடம்விளங்கிய பக்தி, பொறுமை, கடமையில்பற்று, தாழ்மைஆதியவற்றால் எல்லோரதுஅன்பையும், நன்மதிப்பையும்பெற்றமையாலே கடைசியாய் இவளுக்கு வீட்டுக்கருமங்கள்முழுவதையுமே நிர்வகிக்கும் பொறுப்பு அளிக்கப்படலாயிற்று. இவளின் பக்திவணக்கத்தை லூக்காநகர் மேற்றிராணியாரே இவள்மரித்து ஒருமாதஞ்சென்றபின்— அதாவது 1278-ம் ஆண்டு முறைப்படியே அதிகாரமளித்து முந்தமுந்த ஆரம்பித்துவைத்தார். இவள் சலுகையால் அநேகபுதுமைகள் நடைபெற்றன. இவளின் திரு உடல் லூக்காநகர் அர்ச். பிறெடியன்மகாலயத்துக்கு மாற்றப்பட்டு இன்னுமே அழியாமல் இருந்துவருகிறது. 1696-ம் ஆண்டு 12-ம் இன்னொசெந்து எனும்பாப்பானவர் இவளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளலாயினர்.

## சுரங்கத்தொழிலாளர் தலைவர்

கம்யூனிஸ்த கட்டுப்பாட்டுள் அடங்கிய ஓர்தொழிற்சங்கமாகிய இத்தாலிய சுரங்கத்தொழிலாளர்சம்மேளனத்தின் தேசீய காரியதரிசியான அன்ரோனியோ ஆர்மினோஎன்பவர் தனது பதவியை இராசிநாமாச்செய்துவிட்டு, இத்தாலிய சுரங்கத்தொழிலாளரின் சுதந்திர தொழிற்சங்கத்தில் சேர்ந்திருக்கின்றார். இவர் பலவருடகாலம் சுரங்கத்தொழிலாளர் சங்கத்தின் தேசீயகாரியதரிசியாயிருந்து மிகுந்தபிரஸ்தாபம் பெற்றவர். கம்யூனிஸ்த கட்டுப்பாட்டில்அடங்கியுள்ள தொழிற்சங்கத்தைக்கைவிட இவர் கொண்டதீர்மானம் ஏனையசுரங்கத்தொழிலாளரிடையே மிகுந்த மனமாற்றத்தைக் கொண்டுவருமென எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்திலே இத்தாலிய கம்யூனிஸ்தகட்சியிலிருந்து இராசிநாமாச்செய்து விலகிக்கொண்ட மற்றொருவர், கமாசுலாநகரிலே நகரசபை டக்றராயிருக்கும் டக்றர் மார்வெல்லி என்பவரே.

## சீயதேச சர்வகலாசாலை

தாய்நாடென்று தற்போது அறியப்படுகின்ற சீயநாட்டின் தலைப்பட்டணமாகிய பாங்கொக் நகரிலுள்ள புத்தசர்வகலாசாலையிலே சலேசியன்சபையைச் சேர்ந்த ஓர்மிஷனரியான வண. ஜோண் உலியானுசுவாமியார் கடந்த ஆறுமாதங்களாக மூன்றும், நான்காம்வருட வகுப்பு மாணவர்களுக்குக் கத்தோலிக்க வேதசாஸ்திர போதகாசிரியராய் இருந்துவருகின்றார். அச்சர்வகலாசாலைஅதிபர் இவரதுநியமனவிஷயமாய்ப் பேசியவிடத்து, "உயர்தரகல்விகளில் ஈடுபட்டுள்ளவர்களும், தங்களிடம் புத்தசமயம் நம்பிஒப்படைக்கப் பட்டவர்களுமான இளம்புத்தகுருமார் உலகின் பிரதான சமயங்களைப்பற்றி — அவற்றுள் முதல்இடம்வகிப்பதாகிய கத்தோலிக்க சமயத்தைப்பற்றி அறிந்திருக்க வேண்டுமென நான் ஆசிக்கிறேன்"னெனக் கூறலாயினர்.

## மூங்கிற்திரை விழுமிடத்து

செஞ்சீனாவின் மூங்கில்திரை விழுமிடத்து அங்குசென்று திருத்தொண்டு ஆற்றுவதற்கெனச் சித்தஞ்செய்யப்பெற்ற யேசுசபையைச்சேர்ந்த பதின்மூன்றுபிறதர்மார் சமீபத்திலே பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள பாக்கியோநகரில் அப்போஸ்தலிக்க ஸ்தானிகரான வாக்னேலி அதிமேற்றிராணியாரால் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றனர். இவர்களில் சீனர்நால்வரும், இத்தாலியர்மூவரும், பிரான்சியர்இருவரும், சீனவம்சத்தைச்சேர்ந்த இந்தோனீசியர்இருவரும், கனடியர்ஒருவரும், ஸ்பானியர்ஒருவரும் அடங்குவார்கள். சீனதேச ஷாங்காய்நகரிலிருந்து கடந்த கோடைகாலத்திலே பாக்கியோ நகருக்கு மாற்றப்பட்ட பெல்லார்மின் குருமடத்திலேயே இவர்களெல்லாம் பயிற்சியடைந்துள்ளார்கள்.

## அகதிகளும் ஆங்கிலகத்தோலிக்கரும்

கம்யூனிஸ்த வடவியெற்னாமிலிருந்து சுதந்திர தென்வியெற்னாமிற்போய்க் குடியேறுகின்ற கத்தோலிக்க அகதிகள்மட்டிலே ஆங்கிலகத்தோலிக்கர் மிகுந்த கருணைகொண்டு அவர்களுக்கு உதவியாகப் பணஞ்சேகரித்து வருகின்றனர். வடவியெற்னாமிய அகதிகள் தென் பகுதியிற்போய்க் குடியேறியதலங்களில் அவர்களுக்கென அப்பணங்கொண்டு ஓர்புதிய ஆஸ்பத்திரி கட்டப்படவிருக்கிறது. ஆங்கில அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களது மனுவின் பேரிலே ஆங்கில கத்தோலிக்கர் பதினாயிரம்பவுணுக்குமேல் உபகரித்திருக்கின்றனர். இதிற்பெரும்பகுதி கோவில்களில் சேகரிக்கப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேபஅப்போஸ்தலசபையின் அமைப்பு

(1) சேபஅப்போஸ்தல சபை ஒரு தனி அமைப்பைக் கொண்டது. இந்த அமைப்பு தனது முக்கிய பண்புகளில் மாருமலிருந்தாலும், மற்றக் காரியங்களில் சந்தர்ப்ப வேறு பாடுகளுடன் இசைந்து போகக்கூடும்.

(2) சேபஅப்போஸ்தல சபையின் பொதுவான தலைவர் யேசுசபையின் அதிசிரேஷ்டர். இவர் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு பிரதிநிதியை நியமிக்கலாம். இப்பிரதிநிதி, அல்லது தேசிய செயலாளர் அத்தேசத்தில் இச்சபைக்காகப் பணியாற்றுவார்.

சேபஅப்போஸ்தல சபையின் தலைமைக்காரியாலம் ரோமாபுரியில் யேசுசபை அதிசிரேஷ்டர் அகத்தில் இருக்கிறது.

* * *

### வைகாசி மாதம்

**போதுக் கருத்து :** கிறீஸ்துவ தர்மத்துக்குத் தகுந்தபடி கன்னிமை அந்தஸ்தை மதிக்க வேண்டிக் கொள்வது.

**மிஷன் கருத்து :** பிலிப்பைன் தீவுகளில் தேவ அழைத்தல் பெருகுவதற்காக மன்ருடிக் கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்
1955-ம் ஆண்டு
வைகாசி மாதம் 12-ந் திகதி

## மேற்கு ஜேர்மனி

உலகமுழுவதையும் வெற்றி கொள்ளவேண்டுமென்ற கர்வமேற்கொண்டு கெய்சர் சக்கிரவர்த்தி முதலாவது உலகயுத்தத்தைத் தொடக்கினர். அதில் ஜேர்மனி படுதோல்வியடைந்தது. அதனைத்தொடக்கிவைத்த கெய்சரும் சிம்மாசனமிழந்து தேசாந்திரியாயினர். அகில முழுவதையும் அடிப்படுத்தித் தனிநாயகமாய் விளங்கவேண்டுமென்ற அகந்தை கொண்டு ஹிற்லர் இரண்டாவது உலக யுத்தத்தைத் தொடக்கினர். அதிலும்ஜேர்மனி மறுபடியுமே படுதோல்வியடைந்தது. இதனைத்தொடக்கிவைத்த ஹிற்லரும் ஆற்ருது உயிரைமாய்த்துக் கொணடார். அவர் மறைந்துவிட்டார். அவருக்குப் பக்கபலமாய்நின்றவர்களும் மறைந்தும், மடிந்தும்போயினர். ஆனல், தோல்வியடைந்தஜேர்மனியின் கதி யாதாயிற்று? அது இரு கூறுகளாகத் துண்டாடப்பட்டது. அவற்றில்ஒன்று சோவியற்ரூஷியாவின் ஆதீனத்துக்குள்ளாய், அதுபோடும் தாளத்துக்கெல்லாம் கூத்தாடிக் கொண்டு ஓர் கம்யூனிஸ்த நாடாய் இன்றுகாட்சியளிக்கின்றது. இற்றைக்கு ஐந்துவருடங்களின்முன் சோவியற்ரூஷியா அதற்குச் சுதந்திரம் அளித்த போதிலும், அந்தச்சுதந்திரம் கிழக்குஜேர்மனிய மக்களுக்குச் சுதந்திரத்தை அளிக்கவேயில்லை. வெறும்பெயரளவில் தான் அது இருக்கின்றதல்லாது செயலளவில் சோவியற் அரசுக்கு இன்றும் அடிமைப்பட்டுத்தான் கிடந்துதவிக்கின்றது.

கிழக்கு ஜேர்மனியின்பாடு இவ்வாருக, யுத்தம்முடிந்ததும் பிரித்தானி, அமெரிக்கஐக்கிய தேசம், பிரான்ஸ் எனும் மூன்றுவல்லரசு நாடுகளினதும் ஆதீனத்துக் குள்ளாயிருந்த மேற்குஜேர்மனியும் பத்துவருடங்களுக்குப்பின இமமாதம 5-ந்திகதியன்று சுதந்திரம் அடைந்துள்ளது. அதாவது சுமார் ஐந்துகோடி ஜேர்மனியர் சுதந்திரம் அடைந்திருக்கன்றனர். பிரித்தானி, அமெரிக்க ஐக்கியதேசம், பிரான்ஸ் முதலாம் ஒன்பது நாடுகள் பரீஸ் உடன்படிக்கையை அங்கீகரித்தமையாலேயே அன்றுபகல் 12 மணிக்கு மேற்குஜேர்மனி சுதந்திரநாடாகி விட்டதெனப் பிரகடனஞ்செய்யப் படலாயிற்று. அதனல் இதுவரை மேற்குஜேர்மனியின் எசமான்களாய் இருந்துவந்த பிரித்தானிய, அமெரிக்க,பிரான்சியஅதிகாரிகளின் ஆதிக்கமும், செல்வாக்கும் அங்கே நீங்கிப்போக, ஓர்புதிய ஜேர்மனி உதயமாகியிருக்கிறது. புதியஜேர்மனி என்ரேம். ஏனெனில், கிழக்குஜேர்மனியில் சுமார் ஒன்றேமுக்கால்கோடி ஜேர்மனியர்மாத்திரம் வசிக்க, மேற்குஜேர்மனியிலோ ஐந்து கோடி ஜேர்மனியர்வரை சஞ்சரித்துவருகின்றனர். அதனல் மேற்குஜேர்மனியையே ஜேர்மனிஎனலாம். மேலும் கிழககு ஜேர்மனியில் வசிக்கும் ஜேர்மனியரிலும் பெரும்பான்மையினர் மேற்குஜேர்மனியையே சார்ந்துநிற்பதும் மற்ருேர் நியாயமாகும்.

மேற்குஜேர்மனி சுதந்திரம் பெற்றபோதே இனிஅங்குபிரித்தானியரோ, அமெரிக்கரோ, பிரான்சியரோ, மற்றெந்தநாட்டினரோ மேற்குஜேர்மன் அரசாங்கத்தின் அனுமதிபெற்றே இனிமேல் அங்கு இருக்கவேண்டும். இதுவரைஅவர்கள் இலவசமாகஇருந்துவந்த இல்லங்கள், காரியாலயங்கள்எல்லாம் மேற்குஜேர்மன் அரசாங்கத்தின்வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. இன்றும் மேற்கு ஜேர்மனி ஐந்துலட்சம் போர் வீரர்களைக்கொண்டஓர்இராணுவத்தை அமைத்துக்கொள்ளலாம். ஆனல், இந்தஇராணுவம் என். ஏ. ரி. ஓ. (நேற்ரோ) என அறியப்படுகின்ற வடஅத்திலாந்திக் உடன்படிக்கை ஸ்தாபனநாடுகளுக்கு உதவிசெய்யவேண்டுமென்பதேதவிர வேறெந்த நிபந்தனையுமில்லை. தனது வெளிநாட்டுக்கொள்கையை மேற்குஜேர்மன் அரசாங்கமே நிர்ணயித்துக்கொள்ளும். அதன் அனுமதிப்பத்திரம், ‘விசா’ பெருதளவரும் அங்கு கால்வைக்கமுடியாது.

நிற்க, மேற்குஜேர்மனி சுதந்திரமடைந்ததையிட்டுச் சோவியற்ரூஷியா ஆத்திரப்படவேண்டியநியாயமில்லை. ஆனல், சுதந்திரமடைந்தபின் மேற்குஜேர்மனி சுதந்திரமேற்கு நாடுகளுடன் தோழமைபூண்டுநிற்பதும், அதற்கிடையில் “நேற்ரோ” எனப்படும் வடஅத்திலாந்திக் உடன்படிக்கை ஸ்தாபனத்தைச்சேர்ந்த பதினன்குநாடுகளுடனும் சேர்ந்துகொண்டதும் அதற்குப்பெரிதும் அதிகோராத்திரத்தைஉண்டுபண்ணுமென்று சொல்லவேண்டியதில்லை. ஏனெனில், தங்கள்சக்திகளையெல்லாம் ஒருங்கேதிரட்டிக் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பை மடக்கும்நோக்கமாகவே அந்தப்பதினன்குநாடுகளும் “நேற்ரோ” ஸ்தாபிக்கலாயின. “நேசநாடுகளின் சுதந்திரலட்சியங்களை எதிர்க்கும் சக்திகளை விரட்டும்நோக்கமாகவே நாங்கள் ஒன்றுசேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணியை அமைத்து, அதில மேற்குஜேர்மனியையும் இணைத்துக்கொள்ளுகிருே”மென்று அமெரிக்க வெளிநாட்டுமந்திரியார் டல்லஸ் அவர்களும் பட்டவர்த்தனமாகக் கூறியிருக்கிருர். இவற்றிலிருந்து சோவியற் ரூஷியாவின் அகோராத்திரத்தை இனிதே அறிந்துகொள்ளலாம். அதனல் அது சும்மாவிருக்கப்போவதேயில்லை. அதுவும் வார்சோ நகரில் கூடித் தனது கூட்டுநாடுகளுடன் ஓர்ஐக்கிய முன்னணியை அமைக்க முன்வந்திருப்பது அதிசயமன்று.




## சதாசகாயமாதா கோணம்

### வைகாசி வணக்கமாதம்

வைகாசிமாதம் மரங்களும், செடிகளும், கொடிகளும் தளிர்த்துச்செழித்துக் கண்ணுக்கினிய காட்சி அளிக்குங் காலம். பூத்துப் புஷ்பித்து நாசிக்கினிய நறுமணங் கமழ்விக்குங் காலம். ஆதலால் இம்மாதத்தைக் கற்புக்கரசியான கன்னிமரியம்மாளின் விசேஷ வணக்கத்துக்கெனக் குறித்துள்ளது நமது பரிசுத்தமாதாவாகிய திருச்சபை.

இந்த வைகாசிமாதவணக்கம் முதன் முதல் ஆரம்பமான விபரம் மரியாயின் தாசர்களுக்கு மனேகரமாய் இருக்குமாதலால் அதனை இங்கு சுருக்கமாகக் குறிப்போம்.

நீர்வளம், நிலவளம்முதலிய பலவளங்களோடு ஞானவளமும் நிரம்பப்பெற்றுப் பூவுலகுக்கோர் திலகமென விளங்குகின்ற நித்திய நகரமெனும் ரோமாபுரியின்கண் விசாலித்த ஓர்வீதியின் மருங்கே விசித்திராலங்காரமாய் அமைக்கப்பெற்றதோர் திருக்கோவிலினுள் ஸ்தாபிக்கப் பட்டிருந்த தேவுலக இராக்கினியாந் தேவதாயின் திருச்சுரூபத்தின் சந்நிதானத்தில் 19-ம் நூற்ருண்டின் ஆரம்பத்திலே, வைகாசி மாதத்தின் ஓர்தினம் சாயுங்காலவேளையில், அஸ்தமிக்கும் ஆதித்தன் தன் சோதிக்கதிர்களை வீசித் தோற்றியதெல்லாந் தங்கமெனத் துலங்கச் செய்யும்நேரத்தில், பச்சைப்பாலகனே என்று மதிக்கத்தக்க சிறுவனெருவன் முழந்தாட்படியிட்டு, தன் இருசிறு செவ்வியகரங்களைக்குவித்து, கண்களை [illegible] இராக்கினியின் [illegible] பிரார்த்தனையைத் தன்மழலைச் சொற்களால் உருக்கத்துடன் செபித்துக்கொண்டிருந்தான். இது கண்ட ஏனையசிறுவர்களும் அவ்வண்ணமே அவனேடு சாயுங்கால வேளைகளில் நாள்தோறும் ஆங்குகூடிக்குழுமி அமலோற்பவ ஆண்டவளுக்கு நறுமலர் மாலைகளைச்சூட்டி அவவைத் துதித்துக் கொணடாடுவாராயினா. இந்தப் பாலபக்தர்களின் கூட்டத்தையும், அவர்கள்பரமநாயகிக்குச் செலுத்திவந்த பக்திவணக்கத்தையுங் கண்ணுற்றபெரியோர்கள் அப்பக்திமுயற்சியில் அவர்களை ஊக்கியதோடு தாங்களும் அதிற்சேர்ந்து தேவதாயாரைப் பூசிக்கத் தலைப்பட்டார்கள். கடைசியாக அக்கோவிற் கட்டளைக்குருவானவரும் இந்தஉத்தம வணக்கத்தைப் பெரிதும்மெச்சி ஆதரித்து, அதற்குத் தம்மாலான உதவியும், உற்சாகமும் அளித்து, இந்தவணக்கம் நடைபெறும் காலங்களில் தாமே முகாமைவகித்து அதனை விசேஷப்படுத்தினர். அது தொடக்கமாக வைகாசிமாத வணக்கம் அயற்பங்குகளுக்கும், கோவில்களுக்கும் காட்டுத்தீயெனப் பரவிப் பற்றிக்கொள்ள, சிறிதுகாலத்துக்குள் அந்நகரமெல்லாம் அம்மாதத்தில் அமலநாயகியை விசேஷவிதமாய்ப் பூசித்து வணங்கி, போற்றிப்புகழ்ந்து, பாடித் துதித்துப் பரமானந்தங் கொள்ளும் பக்தகோடிகள் பலுகிப்பெருகினர்கள். பரிசுத்தபாப்பானவரும் அப்பக்தியை அங்கீகரித்து மே மாதம் மரியாயின் மாதமாக உலகமெங்குங் கொண்டாடும்படி உத்தரவளித்தார்.

ஆகவே, இதுகாலை மேமாதம் எனும் வைகாசிமாதத்தில் கத்தோலிக்க உலகம்முழுவதும் மரியாயின் தாசர்கள் நாள்தோறும் நாளுக்கொருவகையாகப் பீடத்தை அலங்கரித்து, அவவுடைய திருச்சுரூபத்துக்கு அல்லது படத்துக்கு நானுவித மலர்மாலைகளைச் சூட்டி, தூபதீபாலங்காரங்கள் காட்டி, குடும்பத்தார் அனைவரையும் ஒருங்கு கூட்டி, ஏகோபித்துச் செபஞ்செய்து, கீர்த்தனங்கள்பாடித் தேவதாயாரை உபாசித்து ஞானனந்தங்கொள்ளுகின்றனர். இதுபோலவே நமது “சத்தியவேத பாதுகாவலன்” நண்பர்களும் இம் மேமாதத்தில் பரலோக பூலோக அரசியை, பாவிகளின் அடைக்கலத்தை, பக்தர்கள்படைக்கலத்தை, கிறீஸ்துவர்கள் சகாயத்தை, கிருபைதயாபரமுள்ள இராக்கினியை, திரித்துவ ஏக சருவேசுரனிடத்துச் சர்வசக்தியுள்ள மத்தியஸ்தியை, “தாயே, தயைக்கடலே, தாரணியோர்க்காதரவே, தவித்தவர்களுக்குத் தாபரமே, அடியவர்கள் மனேன்மணி, அனந்த குணபூஷணி, அநாத ரட்சகபோஷணி, அம்மணி, அடியோர்களைக் காத்தருள் அம்மா. அடியார்குறை தீர்த்தருள் அம்மா. பாவிகளானஎங்களைப் பாவக்கடல் கடத்திப் பரகதிசேர்த்தருள் அம்மா” என வாயார மனமார வாழ்த்தி வணங்கிப் போற்றித் துதித்து அவவுடைய ஆதரவடைந்து அனவரதம் உய்வார்களாக.

### பதினன்குவருடம் தேநீர்மட்டும்

இங்கிலாந்திலே லங்காஷயரில் வசித்திருந்து சமீபத்தில் காலஞ்சென்ற திரு. ஒஸ்வால்ட் பியர்ட்என்பவர் வெறும் தேநீர்மாத்திரம் அருந்திப் பதினன்கு வருடகாலம் உயிர்வாழ்ந்திருக்கிருர். இவர் 1941-ம் ஆண்டு முதல் அரை மணிநேரத்துக்கு ஒருதடவைவீதம் கடைசிமூச்சு விடுகிறவரையில் தேநீர் மட்டுமே குடித்துவந்தார். முதலாவது உலகயுத்தத்தில் காயமடைந்து இருபதுமுறை சத்திரவைத்தியஞ் செய்யப்பட்ட இவர் தேநீரைத்தவிர வேறெந்தப் பதார்த்தத்தையும் அருந்த முடியாத நிலையில் இருந்துவந்தார். இரண்டாவது உலகயுத்தம் நடந்து கொண்டிருந்தகாலததிலே பிரித்தானியில் தேயிலைத்தட்டுப்பாடு ஏற்பட்ட போது பலர் ஒருசங்கமாகத்திரண்டு தங்கள் பங்கீட்டுத்தேயிலையை இவருக்குக் கொடுத்துவந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

● வத்திக்கான்மகாலய சதுக்கத்தில் சென்ற 1-ந் திகதியன்று இரவு நடைபெற்ற மாபெரும் கத்தோலிக்க தொழிலாளர்சமாகமத்தின்போது இத்தாலியதேச முழுவதிலுமிருந்து ஒவ்றரைலட்சம்பேருக்கு மேற்பட்ட தொழிலாளர் சமுகமாயிருந்து 79 வயதுடையவரான பாப்பரசர் சனக்குழாங்களினூடாகத் தோள் உயரத்திலே சிம்மாசனத்தைநோக்கிச்சுமந்து செல்லப்பெற்றபோது உரத்தசப்தமாக ஆர்ப்பரித்து வாழ்த்தி நின்றார்களெனச் செய்திகிடைத்திருக்கிறது.

● இமயமலையிலே 28,146 அடி உயரமுள்ள கஞ்சின்சிங்கா சிகரத்தின் உச்சியை அடையப் பிரித்தானிய மலையேற்றகாரர் புதியதோர் வழியைக் கண்டுபிடிக்க முயற்சித்துவருகின்றனர். இந்தச் சிகரத்தைஅடையச் சமீபத்திலே இவர்கள் எடுத்தமுயற்சி காலநிலையின் மாற்றங்காரணமாகத் தோல்வியுற்றதால் அடிவாரமுகாமுக்குத் திரும்பிவிட்டார்கள்.

● இந்தியபிரதமர் பண்டித நேரு அவர்கள் டில்லியில் நடைபெற்ற மேதினக் கொண்டாட்டத்தில் பேசியபோது: முதலாளிகளும், தொழிலாளர்களும் தங்களிடையே ஏற்படுந் தகராறுகளைச் சமாதான வழிகள்மூலம் தீர்த்துக் கொள்ளவேண்டும்; கதவடைப்புகளும், வேலைநிறுத்தங்களும் நாட்டின் நலனுக்குத் தீமைசெய்வனவாகுமெனக் கூறலாயினர்.

● அமெரிக்கவரசு அணுஆயுதப் பரீட்சைகளைத் தொடர்ந்து நடத்துமானால், அமெரிக்கஉதவியை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் படாதென்று முன்னைநாள் இந்திய கவர்னர்-ஜெனறல் திரு. சி. இராசகோபாலாச்சாரிஅவர்கள் சென்ற 2-ந்திகதியன்று சென்னையில் நடந்தேறிய ஓர்பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

● ஜப்பானியஅரசு வருகிற 1956-ம் ஆண்டின் பங்குனிமாத இறுதியிலே ஆயுதபாணிகளான 1,93,000 போர் வீரர்களைக் கொண்டிருப்பதற்குத் திட்டஞ்செய்கின்றது. இது தற்போதுள்ள போர்வீரர்கள் தொகையிலும் 31,000 பேரால் கூடியதாகும். அடுத்துவரும அரசிறைவருடத்திலே ஜப்பான் தனது பாதுகாப்புக்கென்று 8,580 கோடி யென்நாணயம் செலவிட உத்தேசிக்கின்றது.

● இந்திய மிருகவைத்தியர்கள் கழகம் நடத்திவந்த ஆராய்ச்சியின்பலனாக மாட்டுச்சாணத்தில் "புறொட்டீன்" சத்து இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறது. சாணத்தை எடுத்துத் தண்ணீரில் அலசியபிறகு எஞ்சியிருப்பதைக் காயவைத்து எடுத்துக்கொண்டு கோழிகளுக்குப்போடும் தீனியோடு கலந்துபோட்டால் அவைகள் அதிகமான முட்டைகள் இடுகின்றனவாம். அதைத்தின்னும் கோழிக்குஞ்சுகள் சீக்கிரம் வளருகின்றனவாம்.

● கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள செக்கோசிலவாகிய நாட்டிலே வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்கள்தானும் வாங்கிக்கொள்ளப் பணமின்றித்தவிக்கும் குருமாருக்கு உணவுப் பொருட்களும், திருப்பணிகளுக்குத் தேவையான பிறபண்டங்களும் றோமையிலிருந்து சிலபரோபகார சங்கங்களால் பார்சல்களாக அனுப்பப்பட்டுவந்தன. இந்தப்பார்சல்கள் வருவதையிட்டுக் கம்யூனிஸ்தபொலிசர் தங்களுக்குப் பலவிதமானசங்கடங்களை உண்டுபண்ணுவதாலே அவைகளை அனுப்பாமல்விடுவதே நல்லதென்று அவர்கள் றோமைக்கு எழுதியிருக்கின்றார்கள்.

● நியூசிலாந்திலே மகோகாய்எனுமிடத்திலுள்ள ஆஸ்பத்திரியில் குஷ்டரோகத்தைக் குணப்படுத்தவல்ல பால்குற்றும் புதியமருந்தொன்று பரிசோதனைசெய்யப்பட்டு வருகிறது. நியூசிலாந்தைச்சேர்ந்த ஓர்கன்னியாஸ்திரியான சங். சிஸ்றர் மேரிஅவர்களது ஆராய்ச்சியின்பலனாகவே இது கண்டுபிடிக்கப்படலாயிற்று. தற்சமயம்இவர் பரீஸ்நகரிலுள்ள பாஸ்தோநிலையத்தில் பணியாற்றிவருகின்றார்.

● பிரித்தானியிலே நிகழும்வைகாசிமாதம் 26-ந் திகதியன்று நிகழவிருக்கும் பாராளுமன்றப் பொதுதேர்தலில் கத்தோலிக்கரான அபேட்சகர்களாய் 50 பேர் போட்டியிடுகின்றார்கள். இவர்களில் 25 பேரும் அங்கு இதுவரை பாராளுமன்ற அங்கத்தவர்களாய் இருந்துவந்தவர்கள். புதிய அபேட்சகர்களில் ஓர் நூலாசிரியையும், பத்திரிகாசிரியையுமான செல்வி மூறியெல் பொலென்எனும் பிரபல பெண்மணியும் ஒருவராவர்.

● ஓர்கர்ப்பவதியின் முகத்தில் தோன்றும் சில அடையாளங்களைக் கவனித்துவிட்டு அவள்கர்ப்பத்திலுள்ள குழந்தை ஆணு, பெண்ணுஎன்று சரிவரச் சொல்லக்கூடிய நிபுணர்ஒருவர் தென்னாபிரிக்காவிலே டேர்பன்நகரில் இருக்கின்றார். ஜான்றேஸ் எனப் பெயரிய 43 வயதுடைய ஓர் எஞ்ஜின் சாரதியானஇவர் கடந்தஐந்துவருடகாலமாக இவ்வாறு சொல்லிவருகின்றாராம். அவர்சொன்னது ஒருபோதுமே பொய்த்ததில்லையாம்.

● ஆந்திரஇராச்சியத்தில் ஸ்ரீகாகுளம் பகுதியைச்சேர்ந்த ஜிர்கிலாகா எனுங்கிராமத்திலே "பெறில்" என்ற அணுச்சக்திமூலப்பொருள் இருப்பதை ஆந்திரசர்வகலாசாலையின் ஆராய்ச்சி மாணவரான எஸ். கே. மொஹினுதீன் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். இதைக்கண்டுபிடித்ததற்காக அவருக்குப் பரிசளிக்க ஆயத்தம்நடைபெற்றுவருகிறது.

● இனிப்புப்பண்டங்கள், மிட்டாய்கள் உண்பதாலே பிள்ளைகளின் பற்களுக்குத் தீங்குவிளையாதென்பதை லண்டன்நகரிலே நான்கு பிரித்தானிய டக்றர்மார் தற்போது உறுதிப்படுத்தியிருக்கின்றனராம். லண்டன், லிவர்ப்பூல், ஷெவ்வீல்ட்முதலாம் நகரங்களில் 2—14 வயதுக்கு இடைப்பட்டபிள்ளைகளைப் பல்வைத்திய ஆராய்ச்சிக்கமிற்றியைச் சேர்ந்த இந்த நான்குடக்றர்மாரும் பரிசோதனைநடத்தியே இவ்விதம் கண்டறிந்திருக்கின்றனராம்.

● இந்தியாவிலே சதநாணயமுறையைப் பாவனைக்குக் கொண்டுவருதற்கான சட்டம்ஒன்று இந்திய வருமான–பாதுகாப்புச்செலவு மந்திரியால் இந்திய சனப்பிரதிநிதிகள் சபையில் சென்ற 7-ந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இந்திய ரூபா தொடர்ந்துபாவனையில் இருந்துவரும். ஆனால், ஒருரூபா பதினறு அணுவாகப் பிரிக்கப்பட்டிருப்பதற்குப் பதில் 100 சதங்களைக் கொண்டதாயிருக்கும்.


விற்பனைக்கு :

திரு இருதய
வணக்கமாதம்

(வண. யோசெவ் அல்போன்ஸ் சுவாமிகளால் எழுதப்பெற்ற புதியபுத்தகம்.)

பிரதிவிலை : ரூபா 1 சதம் 50.

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## தேவசுதனைச் சுவீகரித்த திருத்தாதை

### கலிவிருத்தம்

வண்டுதேனை உண்டுபாடி மகிழுகின்ற தேமலர்த்
தண்டுகாவி நின்றிலங்கு தவிதுராச மைந்தனா
கொண்டுநாடு நீங்கியோடிக் குழந்தையேசைக் காத்தரேல்
அண்டுமெங்கள் மேலிரங்கி அவலைநீக்கல் வல்லையோ!

●

அரம்பிடித்து வாள்திருத்தி அயர்விலாது நாளெலாம்
மரம்பிடித் தரிந்தபோதில் மறுவிலாத மாமலர்க்
கரங்கொடுத்து வந்தயேசு கத்தனெந்தை கேட்டிடில்
வரங்கொடுத்தெம் வாதைநீக்கி வந்துகாத்தல் வல்லையோ!

●

பரமதேவ னுக்குகந்த பலியதாகப் பாரிலே
நரனுருத்த ரித்துவந்த நமதுயேசு பாலனை
அரவணைத்து உச்சிமோந்து அமுதுதேடி ஈந்தவர்
சிரமமேது மின்றியெங்கள் சிறுமைபோக்கல் வல்லையோ!

●

உப்பிலாத பண்டமன்ன உலகவின்பம் வென்றவன்
ஒப்பிலாத ஞானசோதி ஒளிவளர்த்துத் தந்தவன்
தப்பிலாத புண்யமேழும் தவழநின்ற தேசினன்
அப்பனுகி யெம்மையாண்டு அரவணைத்தல் வல்லையோ!

●

தேவமார்பி லேசரிந்து தேவதாய ணைத்திட
சீவனேபி ரிந்தநேச தேவதாதை தம்மைநாம்
ஆவலோடு வேண்டிவந்தால் அந்திவேளை நிச்சயம்
பாவமாசி லாததூய பாக்யசாவு வல்லையோ!

— "யுவன்", கரம்பொன்.

## பாப்பரசர் குருமடம்
### பிரியாவிடை வைபவம்

கண்டியிலே அம்பிற்றியாவிலுள்ள பாப்பரசர்குருமடத்துப் பேராசிரியர்களுக்கும், குருத்துவமாணவர்களுக்கும் சென்றதிங்களன்று திரு. ரி. ஏ. எம். பெர்ணண்டோஅவர்களால் அருளப்பெற்ற தேநீர்உபசாரணை ஒன்றின்போது கண்டிநகர கத்தோலிக்க மக்கள் அவர்களுக்குப் பிரியாவிடை கூறிநின்றார்கள். இந்தக்குருமடம் நிகழும் வைகாசிமாததிலே தனது புதிய தானமாகிய பூனு நகருக்கு இடம் மாற்றப்படும். கடந்த அறுபதுவருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கண்டிநகர்வாசிகள் குருத்துவத்துக்கு மாணவர்களைப் பயிற்றும் ஓர்தானமென்று இதனை நன்றாய் அறிந்திருந்தார்கள். இதிலிருந்து பலநூற்றுக்கணக்கான குருத்துவ மாணவர்கள் குருப்பட்டம்பெற்று ஆரங்கேறி இந்தியாவிலும், இலங்கையிலும், மற்றும் ஆசியாவின்பகுதிகளிலுமுள்ள மிஷன்களில் தொண்டாற்றி வருகின்றார்கள்.

பிரியாவிடையின்போது கண்டிஅரசாங்க ஏசன்றரான திரு. டபிள்யு. ஜே. ஏ. வன் லன்கென்பேர்க் அவர்கள் கத்தோலிக்கமக்கள் சார்பாகப் பேசியபோது: இந்தஉபசாரணையை நடத்திய திரு. பெர்ணண்டோ அவர்களுக்கு நன்றிதெரிவித்து, தாம் ஓர்இளைஞனாய் அரசாங்கசேவையில் அமர்ந்திருந்தபோது, அமைச்சல்விஷயமாய் மட்டக்களப்பிலே யேசுசபைக் குருவானவர் ஒருவரால் தமக்குப் படிப்பிக்கப்பட்ட கசப்பானபாடத்தை ஞாபகத்துக்குக் கொண்டுவந்து, குருமடத்துப் பேராசிரியர்கள் தங்கள் சேவையிலே காண்பித்துவரும் சுயநலமற்ற ஆர்வத்தைப் புகழ்ந்து அவர்களுக்குப் பாராட்டுரைகள் வழங்கினர்.

கண்டிமேற்றிராணியாராகிய மகாவந். டி. பி. றெஞ்ஞோஆண்டவர் எழுந்து திரு. வன் லன்கென்பேர்க் அவர்கள்கூறியவைகளை ஆதரித்துவிட்டுப் பேசியவிடத்து, தாம்கண்டிமேற்றிராசனத்தின் மேற்றிராணியாராகவந்த காலமுதல் எப்போதுமே அக்குருமடத்தைச்சேர்ந்த குருமார், பிறதர்மாரிடமிருந்து பெற்றுக்கொண்ட உதவிஒத்தாசைகளுக்காக மாத்திரமல்ல, ஆனால், மேற்றிராசனத்துக்கு அவர்கள் அளித்துவந்த சோபிதத்துக்காகவும் அவர்களுக்கெல்லாம் தமது சொந்த நன்றியையும் சேர்த்துக்கொள்ள விரும்புவதாகக்கூறினர். குருமடத்தலைவரான வண. அங்கோட் சுவாமியார் எழுந்து, திரு. பெர்ணண்டோ அவர்களுக்கும்; அங்குசமூகமளித் திருந்தவர்களுக்கும் நன்றிகூறிநின்றார்.

## அர்ச். சூசையப்பரின்
## அடைக்கலத் திருநாள்
### கொழும்புத்துறை

இத்திருநாள் வழமைப் பிரகாரம் கொழும்புத்துறைத் தாபனத்திலே நிகழும் வைகாசிமாதம் 22-ந் திகதி (22-5-55) ஞாயிற்றுக்கிழமை பக்திச் சிறப்பாகக் கொண்டாடப்படும். இத்திருநாளுக்குச் சமுகந்தரும்படியாய் அர்ச். சூசையப்பரின் பக்தர்களையும், தாபன பழையமாணவர்களையும் அன்பாய் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சிகள்

**21-5-55 சனிக்கிழமை**
மாலை 7-15 மணிக்கு மாலைஆராதனையும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்.

**22-5-55 ஞாயிற்றுக்கிழமை**
காலை 6-30 மணிக்குப் பாடற்பூசை.
11 மணிக்குப் பழையமாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்.
மாலை 4-30மணிக்கு மாலைஆராதனையும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதமும்.

**தாபனத்தலைவர்**

கொழும்புத்துறை
11-5-55.

● பம்பாய்இராச்சிய பொலிஸ் பட்டாளத்திலே உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்றர்கள், தலைமைக்கன்ஸ்ரபிள்கள் பதவிகளுக்குப் பெண்களையும் நியமிக்கப் பம்பாய்அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. அதனுல்பெண்கள் அவற்றிற்கென்று விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கலாமெனப் பிரசித்தஞ்செய்யப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தானத்தின் பின் ஐந்தாம் ஞாயிறு நிருபம்

### யாக். 1 : 22 — 27.

சென்ற ஞாயிற்றுக்கிழமை வாசித்த நிருபத்தை இன்றும தொடர்ந்து வாசிக்கிறோம்.

கிறீஸ்துவர்கள் எவ்வளவோ பிரசங்கங்கள், போதனைகளை எத்தனையோ தரம்கேட்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை, கடன்திருநாட்கள், கோயில்திருநாட்கள், கூட்டங்கள், கூட்டவைபவங்கள் முதலிய தருணங்களில் பிரசங்கத்துக்குக் குறைவேயில்லை. "சுவிசேஷத்தைத் தாணுதருணங்களிற் போதிக்க வேண்டு" மென்றது அர்ச். சின்னப்பரின் போதனை.

ஆனால், கோவிலுக்கு வந்து வெளியே நின்று கதைபேசி, சிகறெற் புகைத்து, பத்திரிகை படித்து நிற்பவர்கள் எத்தனைபேர். இவர்கள் பிரசங்கங் கேளாமற் போகிறார்கள். பாஸ்குக்கடமை தீராதவர்களும் இவர்கள் தான.

மேலும் பிரசங்கங் கேட்டும் திருந்தாதவர்கள் இல்லையா? இவர்களுக்கு அர்ச். யாக்கோபு அப்போஸ்தலர் "வாக்கியத்தின்படி செய்கிறவர்களாயிருங்கள்" என்கிறார். "கேட்கிறவர்களாய்மாத்திரம இருக்கவேண்டாம்" என்று எச்சரிக்கிறார்.

போதனையைக் கேட்டுவிட்டு, அனுசரிப்பதைப்பின்போடுகிறவர்கள் பேதையர். கண்ணுடியில் தன்உருவத்தைப் பார்த்தவன்போல ஆகின்றனர். கண்ணுடியைப் பார்த்தவன் அதிலே தன் சாயலைக் காண்கிறான். கண்டுவிட்டு அப்பாற்சென்றதும் தன்சாயலை மறந்து போகிறான்.

அறிந்ததைத் தன்சொந்தவிருப்பத்தின்படி நிறைவேற்றுகிறவன் பாக்கியவான்.

அர்ச். யாக்கோபு (நமதுநாவை ஒருநெருப்பு என்றவர்) என்ன சொல்லுகிறாரென்றால் "தன்நாவை அடக்காதவன் தன்னைப் பத்திமானென்பது வீண்" என்கிறார்.

அவர் மெய்யான தேவபத்தி (அல்லது தேவசிநேகத்துக்கு) அடையாளமும் சொல்லுகிறார். தருமம், நற்கிருத்தியம் முதலியன செய்வதுதான் அந்த அடையாளம். "அநாதபிள்ளைகளையும், விதவைகளையும் அவர்களுடைய துன்பத்தில் சந்தித்து" ஆறுதலளிக்க வேண்டும். மெய்யான தேவநேசம் செயலிலேதான் விளங்கவேண்டும். விசுவாசமொன்று, ஒழுக்கம் பிறிதொன்றாய் இருக்கக்கூடாது.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

## திருப்பலி

### "ஓசன்ன" வென்ற வாழ்த்து

ஆண்டவருடைய சீவியத்தில்நடந்த ஒருவிசேஷ சம்பவத்தை இன்று ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறோம். இது அவர் மரணிப்பதற்கு முந்திய ஞாயிற்றுக்கிழமை நடந்தது. அன்று திவ்வியயேசு ஓட்டோலகராக ஜெருசலேமுக்குச் சென்றார். இச்சம்பவம் பூசையின் அடுத்தபாகத்தை விளங்கஉதவும்.

இரட்சகர் கழுதை ஒன்று கொண்டு வரும்படி தமது சீஷர்களில் இருவரைப் பெத்பாஜே கிராமத்துக்கு அனுப்பினார். அக்கழுதையில் சவாரிசெய்து கொண்டு ஜெருசலேமுக்குப் போக விரும்பினார். சீஷர்கள் அப்படியே செய்தார்கள். கழுதையைக் கொண்டு வந்து தங்கள் மேல்அங்கிகளை அதன் முதுகில்விரித்து யேசு அம்மிருகத்தின் மேல் ஏறிச்செல்ல அவர்கள் உதவி செய்தனர்.

ஜெருசலேமுக்குப் போகும்வழியில் ஏராளமான சனங்கள் கூடிச்சென்றனர். அவர்களிற்சிலர் தங்கள் உடைகளைக் கம்பளம்போல் வீதியில்விரித்தனர். வேறுசிலர் பசுமரக்கிளைகளை ஒடித்துப் பரவினர். பவனியிற்சென்றவர்கள், "தாவீதின்மகனுக்கு ஓசன்ன; சருவேசுரனுடைய நாமத்தினால் வருகிற அரசர் ஆசீர்பெற்றவர்" என்று உரத்து வாழ்த்தினார்கள்.

இன்னும் அநேகசனங்கள் பவனியிற் சேர்ந்து கொண்டனர். ஒலிவங்கிளைகளைக் கையிலேந்தி வாழ்த்திக் கொண்டு சென்ற மற்றச்சனங்களுடன் சேர்ந்து "கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர் ஆசீர்வதிக்கப் பட்டவர்; இஸ்றவேல் இராசாவுக்கு ஓசன்ன" என்று வாழ்த்தினார்கள்.

இப்படிப்பட்ட வசனங்கள் பூசையிலும் பாவிக்கப்படுகின்றன. அவைகள் சர்வவல்லபசருவேசுரனுக்கு வாழ்த்து. அவைகளுடன் சம்மனசுகள் மோட்சத்தில் பாடும் துதியுஞ் சேர்க்கப்பட்டிருக்கிறது. "பரிசுத்தர், பரிசுத்தர். சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர். பரலோகமும் பூலோகமும் உமது மகிமையினால் நிறைந்திருக்கின்றது. உன்னதங்களில் ஓசன்ன."

பூசையின் இப்பகுதியைச் "சாங்துஸ்" என்று குறிக்கிறோம். இது பரிசுத்தர் என்ற கருத்துள்ள லத்தீன் சொல். இவ்வேளை பரிசாரகன் மும்முறை சிறுமணியைக் கிலுக்குவான்.

இப்பகுதியின்முன் குருவானவர் முகவுரை வாசிக்கிறார். அதுவும் சர்வேசுரனுக்குத் துதிநிறைந்த செபம். இது தேவவசீகரத்துக்கும் நம்மை ஆயத்தப்படுத்தும்.

உங்கள் பூசைப்புத்தகத்தில் தேவவசீகரத்துக்கு முன்னுள்ள பகுதியும், பிற்பகுதியும் "கனன்" அதாவது பலிமுறை எனப்படும். ஒவ்வொருபூசையிலும் இப்பகுதி ஒரேவிதமானது. மாறாதது. குருவானவரின் பூசைப் புத்தகத்தில் இச்செபங்கள் கொட்டை எழுத்துகளில் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஏனெனில், அவைகள் பிரதானமான வசனங்கள். அதிகப்பற்றுகப் பலிமுறைச்செபம் தொடங்கும் இடத்தில் ஒருபடம் இருக்கும். அது யேசுநாதர் சிலுவையில்அறையுண்ட பாவனையானபடம். அது எமக்குச் சிலுவைப் பலியை நினைவூட்டும்.

"சாங்துஸ்" மணி அடிக்கும் பொழுது சற்றே அவதானியுங்கள். உங்கள் மனமும், பற்றுதலும் பீடத்தை நோக்கவேண்டும். விசேஷ பரலோக ஆசீர்வாதங்கள் உங்களுக்குக் கிடைக்கும். அவைகளைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

அர்ச்சியசிட்டர்கள் எல்லாரும் தேவமாதாவில் பத்தி யுள்ளவர்கள். அவர்களில அர்ச். பிரான்சீஸ் சலேசியாரும் ஒருவர். அவர் மினவுதல் கன்னியர் சபையை அடியிட்டவர். அவர் தேவதாயார்பேரில் எழுதிய செபத்தை இங்கு தருகிறேன்.

அதிசாதுவான கன்னிகையே! நீர் என்னுடைய அன்னையென்றும், நான் உம்முடைய பிள்ளையென்றும் நினைத்தருளும். நீர் அதிக பராக்கிரமம் உள்ளவ. நானே பலவீனம் உள்ள எளிய அற்பன். எனது அதிமதுரமான தாயே! என் நடத்தைகளிலும், செயல்களிலும் என்னை ஆண்டு நடத்தும்படி உம்மை இரந்து மன்றாடுகிறேன்.

அதி தயாபரம் நிறைந்த கன்னிகையே! இது உம்மால் கூடாதென்று சொல்லாதேயும். ஏனெனில், உமது நேசகுமாரன் உமக்கு எல்லா வல்லபமும் தந்திருக்கிறார். உதவிசெய்ய மறுக்காதேயும். ஏனெனில், ஏழை மானிடரினதும், விசேஷமாய் என்னுடையவும் அன்னை நீர்அல்லவோ? உம்மால் உதவி செய்யக்கூடாதாகில் "அவ என்அன்னை; என்னைத் தன்பிள்ளைபோல் கண்காணிக்கிறா; ஆனல், அவவுக்கு வல்லபமோ, வழியோ இல்லையேயென்று நான் பொறுத்திருப்பேன்!" நீர் என்அன்னையாய் இல்லாவிட்டால், "அவவிடம் ஏராளமான நன்மை இருந்தாலும், என்அன்னையாய் இல்லாத பட்சத்தில் என்மேல் அவவுக்கு அன்பில்லை" யென்று சகித்திருப்பேன்.

மதுரம் நிறைந்த கன்னிகையே! நீர் என் அன்னை; வல்லபமுள்ளவ; நீர் எனக்கு உதவ முன்வராவிட்டால் நான் எப்படிச் சகித்திருப்பேன்? ஆகையால், தாயே என்சகல வேண்டுதல்களுக்கும் நீர் இணங்க வேண்டியிருக்கிறது. என் ஆத்துமத்தையும், சரீரத்தையும் பாதுகாத்து, உம்முடைய புண்ணியங்களையெல்லாம் எனக்குத் தந்தருளும், ஆமென்.

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## எனது வினாக்கள்

(1) அர்ச். சூசையப்பருக்குச் சகோதரர் எவராவது இருந்தனரா? இருந்தால் அவருடையநாமம் என்ன?

(2) அல்பியுஸ் யாரை விவாகஞ் செய்திருந்தார்?

(3) பரிசுத்த கன்னிமரியம்மாளும், கிளியோப்பாஸ் மரியம்மாளும் என்ன உறவு முறையானவர்கள்?

(4) அல்பியுஸ்–கிளியோப்பாஸ் மரியம்மாள் தம்பதிகளின் புத்திரர்கள் யார்?

(5) யூதா ததேயுவும், சின்னயாகப்பரும் யேசுக்கிறீஸ்துநாதருக்கு என்ன உறவுமுறையானவர்கள்?

(6) ஜெருசலேமின் முதல்மேற்றிராணியார் யார்?

(7) அர்ச். சின்னயாகப்பர் எப்போது? எங்கே? மரித்தார்.

(8) அர்ச். சின்னயாகப்பர் எவ்விதம் வேதசாட்சியானார்?

(9) அர்ச். சின்னயாகப்பர் நிருபம் ஏதும் எழுதியிருக்கிறாரா?

(10) வைகாசிமாதம் எந்த இரு அப்போஸ்தலர்களின் திருநாளோடு ஆரம்பமாகிறது?

(11) அர்ச். பேதுருவானவரைப் போலச் சிலுவையிலே தலைகீழாக அறையுண்டு வேதசாட்சியான அப்போஸ்தலர்யார்?

(12) திருச்சபையில் எத்தனைபேர் வேதபாரகர்கள்—அதாவது வேதபண்டிதர்களென்று அறியப்படுகிறார்கள்?

(13) இந்த 27 வேதபாரகர்களிலும் இந்தவைகாசிமாதத்தில் திருநாள் மூலம் ஞாபகப்படுத்தப் படுகிறவர்கள் யார்?

(இந்த வினாக்களுக்கு விடைகள் தெரிந்தால் மற்றோர்பக்கத்தில் காணப்படும் விடைகளை அவற்றுடன் ஒப்பிட்டுப்பாருங்கள்).

— A. G.

## சரியான விடைகள்

கடந்த 28-4-55-இல் வெளியான 'காவலனில்' கணிதப்பகுதி என்ற தலைப்பின் சரியானவிடை:

1. நீக்கிவிட்ட எண். 8.
2. ,, 8.
3. ,, 8.
4. 4, 5, 6, 7, 8, 9.

விடைகூறுங்கள் என்ற தலைப்பின் சரியானவிடை:

1. பறித்த தேங்காய்கள் 6.
2. வாங்கிய பழங்கள் 22.
3. ஒவ்வோர் வள்ளக்காரனும் முறையே பெற்றபழங்கள்: 12, 6, 3.

இருபகுதிகளுக்கும் சரியானவிடை அனுப்பியவர்கள்:

மேரி தெரேசா றீற்று,
கலவன் பாடசாலை, முன்னக்கரை.

அன்ரனி சோசா,
த. ஆ. பாடசாலை, போளவத்தை.

அ. அல்போன்ஸ் சிராய்வா,
நல்லாயன் ஆண்பாடசாலை,
மன்னார்.

கத்தரீன் சின்னமலர் மிராண்டா,
"ஆவே மரியா" கன்னியர்மடம்,
நீர்கொழும்பு.

முதலாவது பகுதிக்குமாத்திரம் சரியான விடைகொடுத்தவர்கள்:

மாறிஸ்ரெல்லா மனுவேற்பிள்ளை,
நல்லாயன் பாடசாலை, கொழும்பு.

மேரி பவுலீன மோர்சி,
கலவன் பாடசாலை, முன்னக்கரை.

ஆ. சூசை,
அஸ்கிரி தோட்டம், மாத்தளை.

ஏ. எம். பொன்ராசா,
திரு இருதய கல்லூரி,
வதிரி, கரவெட்டி.

குணராணி அருளானந்தம்,
ஏழாலை, சுன்னுகம்.

அ. டானியல்,
அஸ்கிரிதோட்டம், மாத்தளை.

## மரியாயின் கீதம்

மரங்கள் அடர்ந்த வனம் ஒன்றில் சந்நியாச மடம் ஒன்று இருந்தது. அந்தமடத்திலுள்ள சந்நியாசிகள் செபத்திலும், தபத்திலும், கடினவேலையிலும் தங்கள்காலத்தைச் செலவிட்டு வந்தார்கள்.

இவர்கள் ஒவ்வொருநாளும் சாயந்தர வேளை தங்கள் மந்திரமாலையை இனிமையாகப் பாடுவார்கள். நாள் செல்லச் செல்ல அவர்களின் குரல் கம்ம ஆரம்பித்தது அவர்களும் நரை திரை விழுந்த கி.ழவர்கள் ஆகிக் கொண்டு வந்தார்கள். கடைசியாக, அவர்களால் மந்திரமாலையைப் பாடக் கூடாத நிலைமை ஏற்பட்டது. ஆகையால், அவர்களின் மடாதிபதி, 'இனி மந்திரமாலையைப் பாடவேண்டிய அவசியமில்லை; அதைப் பக்தியோடு வாசித்தால் போதும்' என்று உத்தரவு அளித்தார். ஆனல், அவர் மரியாயின் கீதம் ஒன்றை மாத்திரம் இதற்கு விலக் காக்கினர்.

அவர் சொன்னதாவது: "சகோதரரே, நமதுதாயின் கீதத்தை நாம் வாசிப்பதோடு மட்டும் திருப்தியடையலாகாது. அதைமட்டுமாவது, நம்மால் இயன்றவரை முயன்று பாடத்தான் வேண்டும்."

ஆகவே, அவர்கள் மரியாயின் கீதத்தை ஒவ்வொருநாளும் பாடிவந்தார்கள். அவர்களது குரல் ஒன்றுக்கொன்று முரணுகத்தான் இருந்தது. இன்பமாகப் பாடும் பட்சிசாலங்கள் அவர்களின் பாடலைக்கேட்டுப் பயந்து ஓடத்தான் செய்தன. சந்நியாசிகளுக்கு இது நன்ருகத் தெரியும். ஆனல், அவர்கள் அதை ஒரு பொருட்டாய் எண்ணவில்லை. 'மடாதிபதியின் உத்தரவு இது; இதற்குக் கீழ்ப்படிவதே புத்தி' என்று நினைத்து அவர்கள் தங்களால் கூடியமட்டும் அதைப் பாடியே வந்தார்கள்.

பலவருடங்கள் கழிந்தன. ஒருநாள் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முந்தியநாள் ஒருமனிதன் சந்நியாச மடத்திற்கு வந்து, தான் ஒருசந்நியாசியாக விரும்புவதாகத் தெரிவித்தான். அவனைப் பரிசோதித்த போது, சந்நியாசி ஆவதற்கு வேண்டிய குணங்கள்சில அவனிடம் இருந்தன. அவைகளில் அவனது இனியசாரீரமே அவர்களின் மனதைக் கவர்ந்தது. ஆகையால், அவர்கள் அவனைப் பாடும்படி சொன்னர்கள். அவனும் இனிமையான பாடலொன்றைப் பாடினன்.

சந்நியாசிகள் அப்பாடலிலேயே மெய்மறந்து விட்டார்கள். 'இனி மரியாயின் கீதத்தைப் பாடக் கஷ்டப்பட வேண்டிய அவசியமே இல்லை; இனிமேல் அதை அழகாகப் பாடலாம்' என்று உள்ளூர ஆனந்தித்தனர். ஆகவே, அம்மனிதன் மடத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டான். மரியாயின் கீதம் அன்றுமாலை அந்தவனம் எங்கும் இனிமையாக எதிரொலித்தது. பயந்தோடிய பறவைகள் அவ்வினிய கானத்தைக் கேட்க மீண்டும் பறந்தோடி வந்தன. சந்நியாசிகளின் மனம் அக்கீதத்திலே லயித்திருந்தது. ஆனல், புதிதாக வந்தவரின் மனமோ தனக்குவந்த மகிமையைப்பற்றி எண்ணுததெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தது. "ஆ! என்ன இனிமையான குரல் எனக்கு வாய்த்திருக்கிறது! என்னை இச்சந்நியாசிகள் எவ்வளவு அதிகமாய் விரும்புகிருர்கள். இக்கூட்டத்தில் நான் ஒருவன்தான் நன்ருகப் பாடக்கூடியவன். ஆ! என்ன மதுரமான குரல்!"

இரவு வந்தது. சந்நியாசிகள் செபத்தியானத்தில் ஆழ்ந்திருந்தனர். திடீரென அங்கு ஓர் பிரகாசம் உண்டானது. இதோ, ஆண்டவரின் தூதன் அவர்கள்முன் நிற்கிருர். அவர் அழகாகத்தான் இருக்கிருர். ஆனல், அவரது முகம் ஏன் இவ்விதம் வாட்டம் அடைந்திருக்கிறது? அவர் அவர்களை நோக்கிச் சொல்லுகிருர்.

'இன்றுமாலை நீங்கள் மரியாயின் கீதத்தைப் பாடாத காரணத்தை அறியவே ஆண்டவர் என்னை இவ்விடம் அனுப்பினா. பலவருடங்களாக அவரது அன்னையின் கீதத்தை இன்பமாகவும், பக்திஉருக்கமாகவும் பாடிவந்த நீங்கள், அவரது திருக்குமாரனின் பிறந்தநாளின் முந்தினநாளாகிய இன்று மாத்திரம் மவுனமாய் இருப்பதேன்? இன்று உங்கள்பாடல்பரலோகத்திற்கு எட்டவில்லை.'

சம்மனசானவர் அவர்களின் மறுமொழிக்குக் காத்திருக்கவில்லை. அவர்கள் முகங்குப்புற விழுந்து கிடந்தார்கள். சம்மனசானவர் மறைந்தார்.

புதிதாக வந்தமனிதன் தனக்குக் கற்பிக்கப்பட்ட தாழ்ச்சியின் பாடத்தைப் படிப்பதற்காக வேருெரு சந்நியாச மடத்தை அடைந்தான். சந்நியாசிகள் முன்னிலும் அதிக பக்தி உருக்கத்தோடு மரியாயின் கீதத்தைப் பாடிவந்தார்கள். பறவைகள் முன்போல் பயந்தோடின. ஆனல், யேசு தமதுதாயின் இனியகீதத்தைச் செவிசாய்த்துக் கேட்டார்.

## சிரிக்க வேண்டும்

"ஜெயம்"

சிரிக்க வேண்டுங் குழந்தாய்! — நீ
சிரித்து வாழ வேண்டும்
வருத்துந் துன்பம் நீங்கி — நீ
வளர வேண்டுங் குழந்தாய்.

●

மகிழ்ச்சி யூட்டுஞ் சிரிப்பு — நன்
மலர்ச்சி கூட்டுஞ் சிரிப்பு
அயர்ச்சி யோட்டுஞ் சிரிப்பு — நீ
அதிகஞ் சிரிக்க வேண்டும்.

●

உள்ளம் மலரச் சிரிப்பாய் — உன்
உடலம் மலரச் சிரிப்பாய்
கொள்ளை இன்பந் தேங்க — நீ
குலுங்கிச் சிரிக்க வேண்டும்.

●

மலர்கள் போலச் சிரிப்பாய் — பொன்
மதியைப் போலச் சிரிப்பாய்
அலைகள் போலச் சிரிப்பாய் — உன்
அழகுச் சிரிப்பு வேண்டும்.

## சிரிப்பிலும் பலவிதம்

சிருஷ்டிப்பிலே மனிதனுக்குக் கிடைத்த சலுகைகளில் சிரிப்பும் முக்கியமானது. அது மனிதனுக்குமாத்திரம் கிடைத்த ஓர்கொடையாகும். மனிதனைத்தவிர வேறு எந்தஉயிரும சிரிப்பதில்லை. அவற்றிற்குச் சிரிக்கத் தெரிவதில்லை. அல்லது அவற்றின் சிரிப்பு நமக்குத் தெரிவதில்லை. சிறுகுழந்தையாக இருக்கும்போதே மனிதன சிரிப்பை அறிகிருன். வாழ்வின் போக்கைக்கண்டே மனிதன் சிரிக்கிருன். சிரிப்பதும், சிரிக்கவைப்பதும் மனிதன்தான்.

சிரியுங்கள். நன்ருகச் சிரியுங்கள். உங்கள்துயரை மறந்து சிரியுங்கள். மனம்விட்டுச் சிரிக்கப் பழகிக்கொண்டால் துயரே நம்மைஅணுகாது. எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும் மனிதர்களைப் பார்ப்பதால் நமக்கு ஆனந்தம் உண்டாகிறது. ஆகவே, மனிதன் தனக்காக இல்லாவிடினும் மற்றவர்களை மகிழ்விப்பதற்காகவாவது சிரிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். மகிழ்ச்சி ஏற்படும்போதுதான் சிரிக்க வேண்டும் என்பதில்லை, எப்பொழுதும் சிரிக்கலாம். வள்ளுவர், "இடுக்கண் வருங்கால் நகுக" எனக் கூறியுள்ளார். துன்பம்வரும்போது சிரிக்கவேண்டும் என்ருர். அப்படிச் சிரிக்கமுடிந்தால் துன்பம் தோல்வியடைந்துவிடும்என்று அறிவுறுத்துகிருர்.

மனிதன் எதைப்பார்த்துச் சிரிக்கிருன்? பிறர் அறியாமையைக்கண்டு சிரிக்கிருன். பிறர் பயங்கொள்ளித்தனத்தைக்கண்டு சிரிக்கிருன். பிறர் தற்பெருமை, கர்வம் அடக்கப்பட்ட பொழுது—திருத்தப்பட்டபோது சிரிக்கிருன். நாசத்தைத் தோற்றுவிக்கும் இழிவுச்சிரிப்பு ஆகாது.

பலவித காரணங்களைக் கொண்டு சிரிப்பு வருவதுண்டு. தலைமை அதிகாரிகளைக்கண்டால் இளம்நகைப்பால் தங்கள்பணிவைச் சிலர்தெரிவிக்கிருர்கள். ஏழை பல்லைக்காட்டி, இளித்துப் பிச்சைகேட்கிருன். ஒருவரைப்போல் மற்ருெருவர் நடித்தால் சிரிப்பு எழுகிறது.

சிரிப்பு என்ருல் என்ன? மகிழ்வு என்னும் உணர்ச்சிவேகத்தின் எதிரொலியே சிரிப்பு. இதில் எத்தனையோ வகைஉண்டு. அவை: கோபச்சிரிப்பு, ஏளனச்சிரிப்பு, வஞ்சகச்சிரிப்பு, பைத்தியச்சிரிப்பு, அசட்டுச்சிரிப்பு என்பன.

நமக்குத் தேவையான சிரிப்பு என்ன? மனம்விட்டுச் சிரிக்கும் சிரிப்பு. கள்ளங் கபடில்லாத சிரிப்புத்தான் நமக்குவேண்டும். முகத்திலே புன்சிரிப்பும், கருத்திலே வஞ்சகமும் நிறைந்த போலிச்சிரிப்பு ஆபத்தானது. பழிக்குப்பழி வாங்கும் மயக்கச்சிரிப்பு சிரிப்பவர்களுக்கே அபாயமானது. இந்தப் போலிச்சிரிப்புகளைக் கண்டு எவரும் ஏமாறக்கூடாது.

மகிழ்ச்சியும், பூரிப்பும்பொங்க உள்ளம் மலர்ந்துசிரிக்கும் சிரிப்புத்தான் உண்மையான சிரிப்பு. எனவே, தயவு செய்து சிரியுங்கள். அது உங்கள் உள்ளத்துக்கும், உடலுக்கும் நல்லது.

S. R.

## விடைகள்

(1) ஆம், இருந்தார். அவருடைய நாமம் அலபியுஸ்.

(2) கிளியோப்பாஸ் மரியம்மாளை விவாகஞ் செய்திருந்தார்.

(3) அர்ச். சூசையப்பரும், அல்பியுஸூம் சகோதரரானபடியால் இருவரும் மைத்துனிகளாவர்.

(4) யூதா ததேயுவும், சின்னயாகப்பரும்.

(5) சகோதர உறவுமுறையானவர்கள்.

(6) அப்போஸ்தலர்களில் ஒருவரான அர்ச். சின்னயாகப்பரே.

(7) ஜெருசலேமிலே கி. பி. 62-ம் ஆண்டில் தமது 96-ம் வயதில் மரித்தார்.

(8) யூதர்களால் ஆலய உப்பரிகையிலிருந்து கீழே பள்ளத்தாக்கில் தூக்கியெறியப்பட்டும், கல்லால்எறியப்பட்டும், தண்டொன்ருல் சிரம் நசிக்கப்பட்டும் இறந்து வேதசாட்சியாயினர்.

(9) ஆம். ஓர்சிறியநிருபம் எழுதியிருக்கின்ருர். அதில்தான் அவஸ்தைப்பூசுதலைப்பற்றி முதன்முறையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(10) அப்போஸ்தலர்களான அர்ச். பிலிப்புவுடையவும், அர்ச்.சின்னயாகப்பருடையவும் திருநாளோடு ஆரம்பமாகிறது.

(11) அர்ச். பிலிப்புஎன்று பாரம்பரியம கூறுகின்றது.

(12) திருச்சபையில் வேதபாரகரென 27 பேர் அறியப்படுகின்ருர்கள்.

(13) I. அர்ச். அத்தனுசியார் (வைகாசி 2), II. அர்ச். நசியான்ஸ்சென் கிறகோரியார் (வைகாசி 9), III. அர்ச். பெல்லார்மின் (வைகாசி 13), IV. அர்ச். பீட் (வைகாசி 27).

## கணிதப்பகுதி

1. அண்ணன் தம்பி இரண்டுபேர். இவர்களுக்கு மூன்று மாமபழங்களைச் சரிசமனுகப் பங்கிடவேணடும. ஒரு ஆளுக்கு எத்தனை போகும்?

2. ஒருகோவிலைப் போய்ப் பார்த்த பொழுது அதிலே பலவில்லுகள் வளைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பக்கத்திலும் நின்று பார்க்க ஆறுவில்லுகள் தெரிந்தன. கோவிலில் எத்தனை வில்லுகள்?

ஆனந்தராசா அருளானந்தம்,
ஏழாலை, சுன்னுகம்.

## இத்தாலியும் கம்யூனிஸமும்

இத்தாலியின் தென்பகுதியிலே தீவிரமாகப் பரந்துகொண்டுவரும் கத்தோலிக்கசமய மறுமலர்ச்சியானது, அங்கே மக்கள் கம்யூனிஸ்தகட்சியை எதிர்த்துநிற்பதைப் பலங்கொள்ளச் செய்து, அதனுல் அக்கட்சிஅங்கத்தவர்கள் அதைவிட்டுவிலக வழிபண்ணிவருகிறது. இத்தாலிக்கு ஓர்பெரும் அச்சுறுத்துதலாகக் கம்யூனிஸ்தகட்சி இன்னுமே இருந்துவந்தபோதிலும், ஓரளவிலே விட்டுக்கொடுத்துப் பின்வாங்கத் தொடங்கியிருக்கிறது. நன்கு கல்வியறிவூட்டப் படாதவர்களாயிருந்தபோதிலும் பொதுப்படையாக நல்லவர்களென்று ஒப்புக்கொள்ளப்படுகின்ற தெற்குஇத்தாலியமக்கள் குருமாரும், கத்தோலிக்க சேவையாளரும், மற்றும் கத்தோலிக்க ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் அயராது எடுத்துவரும் முயற்சிகளுக்கு இசைந்துபோகத் தொடங்கியிருக்கிருர்கள். கம்யூனிஸ்தகட்சியிலிருந்தும், அதன் தொழிற் சம்மேளனத்திலிருந்தும் அநேகர் விலகுவதாகக் கடந்தவாரங்களில் இத்தாலியின் தென்பகுதியிலிருந்தும், வடபகுதியிலிருந்தும், ரோமையிலிருந்தும் மீட்டும்மீட்டும் அறிக்கைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு விலகுகிறவர்கள்தொகை சிலநூறுபேர்கள் மாத்திரமேயாயினும் மிகப் பெரியதோர் கம்யூனிஸ்த எதிர்ப்புஇயக்கத்தின் ஆரம்பம்இதுவென நம்பப்படுகிறது.

கடந்தசிலமாதங்களிலே கம்யூனிஸ்தகட்சியின் தொழிற்சம்மேளனம் பத்துவடபிரிவுகளில் 1,84,000 பேருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களை இழந்துபோய்விட்டது. கடந்தவருடத்திலே கம்யூனிஸ்தகட்சி எட்டுப் பிரிவுகளில் பலங்குன்றிப்போக, ஏனைய ஏழுபிரிவுகளில் சொற்பமாகப் பலங்கூடியிருக்கிறது. இத்தாலிய கம்யூனிஸ்தகட்சித் தலைவரான தொகிலியாத்திஎன்பவருக்கு அடுத்தபடியாக ஸ்தானம்வகித்திருந்த பியெற்ரோ செக்கியாஎன்பவர் லொம்பாடியிலுள்ள ஓர்பகுதிக்குமாற்றி ஒதுக்கிவிடப்பட்டமையானது, அக்கட்சியினரிடையே பிளவும், மனஸ்தாபமும் ஏற்பட்டுள்ளன என்பதற்கு ஓர்அறிகுறியாகுமென்று சிலபகுதிகளில் விளக்கங்கொடுக்கப்படுகிறது. இத்தாலியபிரதமர் சிசெல்பா அவர்களின் கூட்டுஅரசாங்கம் இற்றைக்கு ஓராண்டின்முன் சந்தர்ப்பத்தைச் சிறுகவே கொண்டிருந்தது. ஆனல், இன்று அதிகம்பலமுள்ள நிலைமையில் அதுஇருப்பதால் விரைவிலே கம்யூனிஸத்தைஎதிர்த்து அதிக பலமான நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு ஜேர்மனியும் மேல் நாடுகளும்

மேற்கு ஜேர்மனி இம்மாதம் 5-ம் திகதியன்று விடுதலையடைந்து தனிச் சுயேச்சைநாடாயிற்று. ஐரோப்பிய நாடுகளைத் தன்காலடியில் விழச்செய்தார் கெய்சர். ஆனால், ஹிற்லர் கெய்சரைக்காட்டிலும் ஆயிரம்மடங்கு அதிக கெடுபிடியை உண்டாக்கி, உலகநாடுகளைத் திக்பிரமையடையச் செய்தார். அப்படிப்பட்டசெல்வாக்கும், பெருமையும் வாய்ந்த ஜேர்மனி இருகூறுகளாகத் துண்டாடப்பட்டது. துண்டுகளில் ஒன்று ருஷியாவுக்கும், மற்றொன்று நேசநாடுகளுக்கும் அடிமைப்பட்டன. ருஷிய ஆதிக்கத்தில்உள்ள கிழக்குஜேர்மனி ஐந்துவருடங்களுக்குமுன் பெயரளவில் விடுதலையடைந்தது. ருஷிய படைகள்வெளியேறிவிட்டன. ஆனால், யுத்தம்நின்றபிறகு சுமார்பத்துவருடங்கள் கழித்து மேற்குஜேர்மனியும் அரசியல் சுதந்திரம் பெற்றிருக்கிறது. லண்டன், பரீஸ் உடன்படிக்கைகளின் அங்கீகாரத்தையும், ஒன்பதுநாடுகளின் சம்மதத்தையும்பெற்று மேற்கு ஜேர்மனி விடுதலை அடைந்திருக்கிறது.

மேற்குஜேர்மனிக்கு விடுதலையளிக்கும் யோசனையைப் பிரேரணைசெய்த அமெரிக்கவாசின் அடிப்படையான நோக்கம் ஒன்றுதான். அதாவது, மேற்குஜேர்மனியை நாஸியகால இராணுவநாடாக்கி, அதை ருஷியாவுடன் முட்டவிட்டு, ஐரோப்பாவில் நேசநாடுகளின் ஆதிக்கத்தை நிரந்தரமாகநிலைக்கச்செய்யவேண்டும் என்பதேயாகும். ஐரோப்பாவில் மேற்கு ஜேர்மனியும், ஆசியாவில் ஜப்பானும் அமெரிக்காவையும், நேசநாடுகளையும் ஆதரிக்கும்இராணுவநாடுகளாக்கிவிட்டால், ருஷிய—சீன கம்யூனிஸ்தர்களின் கையோங்காது என்பதே அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரியார் திரு. டல்லஸின் மாற்றமுடியாத கருத்தாகும். அப்போது மேற்குநாடுகள் பகிஷ்கரித்துப் "பழையது" என்று ஒதுக்கிய கம்யூனிஸ்த ருஷியாவை ஹிற்லர் வளர்த்தார். தோள்மீது தூக்கிவைத்து விளையாடினார். அதனுடன் இருபதுவருட அனுக்கிரமிப்பு உடன்படிக்கை செய்துகொண்டார். ஆனால், அடுத்தஇரண்டு வருடங்களில் அந்தஉடன்படிக்கையை ருஷியா நிராகரித்தது. ஹிற்லர்மீது ஸ்ராலின் அல்லது ஸ்ராலின்மீது ஹிற்லர் யுத்தம்செய்தார். ஜேர்மனி தோற்றது. கம்யூனிஸமும், ருஷியாவும் பிழைத்தன. அதைப்போலவே, சரித்திரம் மீண்டும் நடக்கலாம். இன்று அமெரிக்காவின் கையாளாக இருந்துவரும் மேற்குஜேர்மனியும், ஜப்பானும் நாளை அமெரிக்காவுக்கு விரோதமாகத் திரும்பி ருஷியாவுடன் சேர்ந்துகொள்ளலாம். ஆனால், அம்மாதிரி எளிதில் நேராதபடி அமெரிக்கா பார்த்துக் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

மேற்குஜேர்மனியின் பிரதமர் டக்றர் அடனோர்அவர்கள் மேற்குநாடுகளுடன் தாளம்போட்டு, முதலில் அரசியல் ஆதிபத்திய உரிமையைப் பெற்றிருக்கிறார். உடன்படிக்கைப்படி, பரீஸ் உடன்படிக்கை நாடுகளின் அந்தஸ்துக்கும், மேற்குஜேர்மனியின் அந்தஸ்துக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. அரசியல் ஆதிபத்திய உரிமையுடன் ஜேர்மனி ஐந்துலட்சம் வீரர்களைக்கொண்ட ஒருபடையைத்திரட்டவேண்டும். சிறுசிறு யுத்ததளவாடங்களை அது ஒரு குறித்தஅளவில் வைத்துக் கொள்ளலாம். விமானப்படையும், கடற்படையும் சிறியஅளவில் வைத்திருக்க அது அனுமதிக்கப் பெற்றிருக்கிறது. இந்தச் சின்னஞ்சிறு யுத்ததளவாடங்களுடன் மேற்குஜேர்மனி ஐரோப்பாவில் ஒரு சிறந்த வல்லரசாகிவிட முடியாது. இரகசியஆயுதங்கள்பல மேற்குஜேர்மனியிடம் திரு. சேர்ச்சில்அவர்கள் விட்டு வைத்திருப்பார்; ஐந்துலட்சம் வீரர்கள் 50 லட்சமாகவும் பெருகலாம்; முதற்தரமான யுத்தவிமானங்கள், யுத்தக் கப்பல்கள், அணுக் குண்டுகள் போன்றவை மேற்கு ஜேர்மனியிடம் இரகசியமாக இருக்கக்கூடுமென்பதே ருஷியாவின் சந்தேகம்.

திரு. சேர்ச்சில் பிரதமராக இருந்து "யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுதே ஜேர்மனியரின ஆயுதங்களைப் பத்திரமாகஎடுத்துவைக்கச் சொன்னேன்; அவசியம் நேர்ந்தால், நாஸிகளைக் கொண்டு ருஷியர்களைத் தாக்கவேண்டுமென்று நான் சேனாதிபதி மொணட்கோமறிக்குத் தந்தி கொடுத்தேன்" என்றுசொன்னதையும், பிறகு அதை நிறுத்திவிட்டதையும் உலகம் அறியும். யுத்தம் நடந்துகொண்டிருந்தபொழுது ருஷியாமீது மேற்குநாடுகளுக்குச் சந்தேகம் இருந்ததென்றால், அந்தச்சந்தேகம் யால்டா உடன்படிக்கை இரகசியங்களால் மேலும் உறுதியடைகிறது. நேசநாடுகளின் நோக்கம் மேற்கு ஜேர்மனியைப் பூரணபலமுடைய இராணுவநாடாக்கி, அதை ருஷியாவுக்கு விரோதமாக உபயோகிக்கவேண்டும் என்பதுதான் என்பதில் சந்தேகமில்லை.

ருஷியா இனிமேல் சும்மாஇருக்கமாட்டாது. அது எதிர்முஸ்திப்புகளைச் செய்யமுன்வரும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளை அது இனித் தன்வலைக்குள் இழுத்துப்போட்டுக்கொண்டுபிரான்ஸ், பிரித்தானியுடன் தான் செய்துகொண்டுள்ளநேசஉடன்படிக்கைகளை உடைத்தெறியும். அதன்மூலம் உடனே யுத்தம் தோன்றிவிடாது. ஆஸ்திரியா, நேசநாடுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையடையவேண்டும். ஆஸ்திரிய உடன்படிக்கைபற்றி ஒரு சுமுகமான உடன்பாடுகள் ஏற்படுமா? ஏற்படாதா? என்பதே இப்போதையவிசாரம். உடன்படிக்கைகள்ஏற்பட்டாலும், ஏற்படாவிடினும், ஆஸ்திரியாவை ருஷியா தன்வலைக்குள் இழுத்துப் போட்டுக்கொண்ட பிறகுதான் அது பேர்ளினில் யுத்தம்ஆரம்பிக்கும். மேற்குஜேர்மனியைக்காட்டிலும் பன்மடங்கு அதிக இராணுவபலத்தை ருஷியா கிழக்கு ஜேர்மனிக்குக் கொடுக்கலாம். எனவே ஐரோப்பாவில் இனி அமைதிஎன்பது பகற்கனவுதான்.

---

## அவனுக்காகவா பரிந்து ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசன் அது ஏதோ தெய்வீகபுண்ணிய சம்பந்தமான விஷயமாக இருக்குமென நினைந்து, அதைப்பற்றி மேலும் வற்புறுத்தாமல் விட்டுவிட்டான். மேலும், லூயிஸ்சுவாமியாரே நேரில் வந்து கேட்டுக்கொண்டபடியால், தனியேலை மன்னிக்க உடன்பட்டான். உடனே தனியேலுக்குச் சுயாதீனம்அளிக்கப்பட்டதாக அரசாங்க பத்திரத்தின் மூலம் அவனுக்கு அறிவிக்கும்படி அதிகாரிகளுக்கு ஆணையிட்டான்.

மேலும் மன்னன் பொலிஸ்அதிகாரியை அழைத்து, தனியேல் தாய்நாடு திரும்பியதும் அவனை நேரே தன்னிடம அழைத்துவருமாறு கட்டளையிட்டான். லூயிஸ்சுவாமியார் தன்னிடம் சொல்ல இஷ்டப்படாத இரகசியத்தைத் தனியேல் வாயிலாக அறிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆவலுடன் தான் அவனைக்காண அரசன் நினைந்தான்.

தனியேல் முதலில் சஞ்சலமடைந்த போதிலும், முடிவில் தனக்குச்செய்யப்பட்ட உபகாரத்திற்குத் தன்னைப் பாத்திரவானுக்கிக்கொண்டான். அரசனின் அடிகளில் வீழ்ந்து, அலெக்சாந்திரியாவில் நடந்த சம்பவம்அனைத்தையும் ஒன்றுமே ஒளியாமல் உரைத்தான்.

அரசன் தனியேல் தனக்குச்செய்த அவமானத்தினுல் மனம்வருந்தியதை மறந்து லூயிஸ்சுவாமியாரின் பெருந்தன்மையை வியந்தான். அதனால் பச்சாத்தாபப் பட்டுக்கொண்டிருந்த பாவியாகிய தனியேலை எழுந்திருக்கச்செய்து, "எல்லாம் மறக்கப்பட்டு விட்டது; கிறீஸ்தவனின் கடமை என்னவென்பதைச் சர்வேசுரனின் தூதராகிய அக்குருசுவாமியார் எனக்குஉணர்த்தினர்; நீ எங்கள் இருவருக்குமே அபகாரம செய்திருக்கிறாய்; நாங்கள் இருவரும் சேர்ந்து உனக்கு மன்னிப்புக் கொடுக்கிறோம்; அவர் உனக்கு உன தாய்நாட்டைத் திருமபத்தந்தார்; நான் என் அரசாங்கத்தின் உபகாரச் சம்பளப் பட்டியலில் உன்பெயரையும் சேர்க்கிறேன்" என்றான்.

இதைக்கேட்டதும் தனியேலுக்குண்டான ஆச்சரியமும், ஆனந்தமும் அளவிட முடியாதனவாயின. அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டதும் நேரே லூயிஸ்சுவாமியாரிடம்சென்று நன்றியறிதலுடன்கூடிய கணணீரோடு அவர்காலில் வீழ்ந்தான்.

அவனுடைய மனஸ்தாபம் மாறிப்போகவில்லை. அந்தக்ஷணமே லூயிஸ் சுவாமியார் சிரேஷ்டராயிருந்த மடத்தில் குருப்பட்டம்பெறாத இரணடாம் வகுப்புச் சந்நியாசியாகச் சேர்ந்து, தனது வாணுள்முழுவதும் தன்பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டுத் தபசு செய்துகொண டிருந்தான். அரசன் ஏற்பாடுசெய்த உபகாரச்சம்பளத்தைத் தனியேல் ஒருமுறைதானும் பெற்றுக் கொண்டவனல்ல.

அரசர், லூயிஸ்சுவாமியார், தனியேல்ஆகிய மூவரிலும் யார்சிறந்தவர்? அரசர் இரக்கத்தில் சிறந்திருக்கிறார்! சுவாமியார் பரிசுத்தத்தில் சிறந்திருக்கிறார்! தனியேலோ பச்சாத்தாபத்தில் சிறந்திருக்கிறார்!

என்னே! கிறீஸ்துவ பிறர்சிநேகத்தின் மகிமை.

---

**வண. எஸ். ஏ. பெஞ்சமின்**
சுவாமி அவர்களின்
**17-ம் வருட**
**மரண ஞாபகம்**
**வைகாசி 13-ந் திகதி வெள்ளிக் கிழமை**

"தேவனுன உமதுநாமத்தின் நிமித்தம் என்னை இரட்சித்து உமதுவல்லமையினுலே எனக்கு நியாயஞ்செய்யும்."

"மண்ணுக்குள் உங்கள் உடல் மறைந்தாலும் என்மனக்கண்ணுக்குள் உங்கள்உருவம் கணப்போதும் நீங்கிடாதே."

இதைக்கண்ணுறும் வண. சுவாமிமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமார், அவரால் ஆன்மலாப மடைந்தவர்கள் எல்லாரும் அவருடைய ஆன்மஇளைப் பாற்றிக்காக மன்றாடும்படி தாழ்மையாய் வேண்டுகிறேன். எங்கள்கோவிலில் 13-ந் திகதி வெள்ளிக்கிழமை பாடற்பூசை நடைபெறும்.

வதிரி — பி. லூக்கேஸ்பிள்ளை
3-5-55.

---

**The Jaffna Diocesan Provident Society Ltd.**

**WANTED**

An Assistant Clerk.

**Minimum qualifications :—**

(a) Tamil S.S.C.
(b) English J.S.C. (N.P.T.A.)
(c) A fair knowledge of typewriting.

Apply to :
The Secretary, J.D.P.S. Ltd.,
Catholic Club, Jaffna.

## GOVT. TENDERS

**MANNAR KACHCHERI**

N 1229—Tenders are invited up to 9 a. m. on 30-5-55 for the purchase of the exclusive privilege of selling toddy by retail in the toddy taverns in the Mannar Dist. during the period 1-7-55 to 30-6-56. For particulars see Govt. Gazette of 13-5-55.

## அரசாங்க அறிவித்தல்

**வனபரிபாலன இலாக்கா**

N 1237. 1955-ம் ஆண்டு மே மீ 21-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசினர்மரக் காலையில் பின்வருவன பகிரங்கஏலத்தில் விற்கப்படும். விற்பனவுக்குமுன் அவற்றைப்பார்க்கவிரும்புவோர் டிப்போக்கீப்பரின் அனுமதியுடன் பார்வையிடுவதுடன் அவரிடமிருக்கும் விளம்பரத்தின் பிரதானநிபந்தனைகளை வாசித்து விளங்கிக் கொள்ளவேண்டும். 105 கூறுகள் பாலை, முதிரை, ரானை, காட்டாமணக்கும், கல்மில்லைமரங்களும், 97 அரிந்தமரத்துண்டுகளும், 400 கம்பிக்கட்டைகளும்.

## தேவை

**யாழ்ப்பாண மேற்றிராசன சேமலாப சங்க லிமிற்றெட்**

ஒரு உதவிலிகிதா. குறைந்தளவு பின்வரும் தராதரப் பத்திரங்களைக் கொண்டவராய் இருக்கவேண்டும்.

(அ) தமிழ் எஸ். எஸ். சி.
(ஆ) ஆங்கிலம் ஜே. எஸ். சி. (என். பி. ரி. ஏ.)
(இ) ரைப் அடிப்பதில் நியாயமான அறிவு.

மனுப்பண்ணவேண்டிய விலாசம்:

காரியதரிசி,
யா. மே. சே. ச. லிமிற்றெட்,
கதலிக் கிளப், யாழ்ப்பாணம்.

சொன்னதைச் செயலில் காட்ட வேண்டும். அன்றேல் சொல்லாமல் இருந்துவிட வேண்டும்.

## விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) | |
| இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடித மூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## புதியகிராமத் தலைமைக்காரர்

நொச்சிக்குளவாசரான திரு. கபிரியேல் பெறேரு என்பவரின் புதல்வர் திரு. சந்தியோகு பெறேரு அவர்கள் மன்னுரைச்சேர்ந்த கள்ளியகட்டைக் காட்டுப்பகுதிக்குப் புதிய கிராமத்தலைமைக்காரராகத் (பொலிஸ் விதானை) தெரியப்பெற்றிருக்கின்றார். இவர் இளவாலை சென். என்றீஸ் கல்லூரிப் பழையமாணவர். இப்பதவிக்கு இவருடன் 13 பேர் மனுப்பண்ணியிருந்தனர். இவர்தந்தையாரும் அநேக வருடகாலம் இப்பகுதிக் கிராமத்தலைமைக்காரராகவும், உடையாராகவும் கடமையாற்றியவர்.

— நிருபர்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 12-1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org